சுட்டீஸ்

Sweet Life

கதைகள்



MWJ ஜோசப் B.Sc.,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

"சுட்லைஃப் Sweet Life கதைகள்"

பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும்

நல்ல பிள்ளைகளாக வாழ்ந்து இயேசுவின்

அன்பை புரிந்து கொள்ள உதவும் கதைகள்

எம். டபிள்யூ. ஜே. **ஜோசப்**

is presented to

....

....

by

....

....

on

....

....

விலை : ரூ.30/-

Published By :
M. John Titus MBA.,
4-2-26(1) Church North Street,
Keela Surandai - 627 859
V.K.Puthur. (TK)
Tirunelveli District.

Cell : 97887 50452
Phone : 04635 254545

First Edition : 2012 March
Second Edition : 2012 September

Written by : MWJ.Joseph B.Sc.,

Edited by : G.Deboral Joseph M.Sc.,B.Ed.,



உள்ளே...



எழுதியோன் எழுதுகிறேன்...

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னையும் எனக்குள் திறமைகளையும் படைக்காவிட்டால், இந்த புத்தகத்தை என்னால் படைத்திருக்க முடியாது எனவே என்னையும் என் திறமைகளையும் படைத்த என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முதலாவது துதி தோத்திரங்களை ஏறெடுக்கிறேன் "ஒரு நாள் வீட்டில் தூங்கி எழுந்து என் ஆண்டவரோடு அதிகாலை ஜெபத்தின் மூலம் பேசிக்கொண்டிருந்தேன். என் செல்போன் ஒலித்தது, பலமுறை ஒலித்தது ஜெபத்தை முடித்துவிட்டு எடுத்து "ஹலோ" என்றேன் மறுமுனையில் ஓர் சந்தோஷ குரல் உங்கள் முதல் பதிப்பான "சுட்டீஸ் சுவீட்ஸ் கதைகள்" "அனைத்தும் விற்று விட்டது, புதிதாக வெளியிட்ட புத்தகம் எங்கே" என்றதும் **"Praise The Lord Jesus"** என்ற ஒரு வார்த்தையை மட்டுமே சொன்னேன். கொஞ்சம் பொறுங்கள் விரைவில் வெளிவரும் என கூறி சென்னையில் இருந்து வந்த அந்த அலைபேசியை வைத்தேன். அதன்பின் 2 மாதம் ஜெபித்து என் அன்பு மனைவி தெபோராள் அவர்களின் துணையோடும் ஆலோசனைகளோடும், இந்த புத்தகத்தை உருவாக்கி உள்ளேன். அனைத்து கதைகளையும் கர்த்தர் எனக்கு தந்த கற்பனை ஞானத்தினால் எழுதியுள்ளேன். யாருடைய மனதையும் புண்படுத்த நான் விரும்பவில்லை இந்த புத்தகம் வெளிவர பெரிதும் உதவியாக இருந்த திருநெல்வேலி பேராயர் Rev.Dr.J.J.கிறிஸ்துதாஸ் ஐயா அவர்களுக்கும், எங்கள் பாலியர்சங்க செயலர் Rev.D.J.ஜெபராஜ் ஐயா அவர்களுக்கும்,

எங்கள் பாலியர் சங்க ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும், என் அன்பு தாயார் திருமதி.ரூத் அவர்களுக்கும் என் மாமா, அத்தை திரு.ஞானபாக்கியராஜ், திருமதி.புஸ்பபாய் அவர்களுக்கும், இந்த புத்தகத்தை வெளியிட்டு அனைத்தையும் அறிமுகம் செய்த என் தம்பி டைட்டஸிற்கும், சிங்கப்பூரில் முதல் முறையாக புத்தகத்தை அறிமுகம் செய்த என் மாப்பிள்ளை ஜேக்கப் பாக்கியராஜ் அவர்களுக்கும் மற்றும் இந்த புத்தக வேலையில் சில பிழைத்திருத்தங்களை செய்ய உதவி செய்த பரப்பாடி திரு.மோகன் ஆசிரியர் அவர்களுக்கும், திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை திருமதி.குளோரி பாஸ்கர் அவர்களுக்கும், கீழச் சுரண்டை திருமதி.ஏஞ்சல் வசீகரன் அவர்களுக்கும், இந்த புத்தகத்தை அச்சிட பேருதவி செய்து, நல்ல ஆலோசனையும், உற்சாகமும் தந்து வெளியிட்ட திசையன்விளை பிரைட் பிரிண்டர்ஸ் குடும்பத்திற்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த புத்தகத்திலிருந்து கிடைக்கும் காணிக்கையானது ஆலய கட்டுமான பணிக்காகவும், மிஷனெரி ஊழியங்களுக்காகவும் மட்டுமே பயன்படுத்த கிருபை செய்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி பலி ஏறெடுக்கிறேன்.

“ கர்த்தராகிய இயேசுவை மட்டுமே நம்பி
வாழ்ந்திடுங்கள் கவலை கண்ணீரை விரட்டிடுங்கள்
ஆசீர்வாதங்களை சுதந்தரித்து கொள்ளுங்கள்.”

அன்புடன்

Joseph MWJ

1.டீலா நோ டீலா

அன்புக்கரசு எப்பொழுதுமே, சுறுசுறுப்பாகவும் சிந்திக்கும் திறன்கொண்ட பையனாகவும் திகழ்வான். அவன் வாயிலிருந்து, ஒரு வார்த்தை எப்பொழுதுமே வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அதுதான் "டீலா நோ டீலா" எதை கேட்டாலும், உடனே டீலா நோ டீலா என்றே கேட்பான்.

அப்பா நான் டூர் போகப் போகிறேன். உங்க பெர்மிஷன் எப்படி? டீலா நோ டீலா என்பான். அம்மா எனக்கு இன்னைக்கு மார்னிங் டிபன் பூரி தான் வேணும் "டீலா நோ டீலா" என்பான்.

இப்படி எப்பொழுதும் கேட்பதாலே அன்புக்கரசு என்ற அவனது பெயரே, "டீலா நோ டீலா" என்றே மாறிவிட்டது.



அவனது தந்தை எப்பொழுதுமே பைபிள் வாசிப்பார். ஆனால் அன்புக்கரசுக்கு பைபிள் வாசிப்பதற்கு விருப்பமில்லை, இருந்தாலும் கடமைக்காக அப்பா சொல்லி விட்டாரே என்பதற்காக வாசிப்பான்.

ஒரு நாள் நண்பர்களோடு விளையாடிவிட்டு வந்து கொண்டிருந்தான். எதிரே அவனது தாத்தா அவனை பார்த்துவிட்டார் "அன்பு எங்கே போகிறாய்?" என்றதும், தாத்தா விளையாடி விட்டு என் நண்பன் வீட்டில் புது படம் ஒன்று காண்பிக்க இருக்கிறார்கள், எனவே நானும் பார்க்கப்போகிறேன் என்றான்.

"இது சரியா" என்று தாத்தா கேட்டவுடனே, இப்போ சரிதான் தாத்தா என்று ஏளனமாக பதில் கூறினான். சரி எந்த வழியாக செல்லப் போகிறாய் என்றார். "இதோ இந்த வழியாகத் தான்" என்றான். "சரி போய் வா" என்றார். போய் சற்று நேரத்தில் திரும்பி தாத்தாவிடம் வந்தான்.

ஏம்பா திரும்பி வந்துவிட்டாய்? "தாத்தா போகும் போது நல்ல பாதையாகத்தான் இருந்தது. ஆனா... வழியில் ஒரு பெரியகுழி ஒன்று இருக்குது பார்த்தாலே பயமா இருந்தது போக முடியல, அதான் திரும்பி வந்துட்டேன்" என்றான். தம்பி சில தப்புகள் முதல்ல நல்ல பாதையா தான் இருக்கும், முடிவில் நம்மை பாதாளம் கொண்டு போய்விடும். மறந்துவிடாதே நீ பாதாளம் போகணுமா? பரலோகம் போணுமா?



தாத்தா அன்புக்கரசுவை பார்த்து "டீலா நோ டீலா" என்றதும் தன் தவறை உணர்ந்தவனாக நல்ல பையனாக வீட்டிற்கு திரும்பிச் சென்றான்.

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு;
அதின் முடிவோ மரண வழிகள். நீதிமொழிகள் 16 : 25

உன் வழிகளிலெல்லாம் அவரை (இயேசுவை) நினைத்துக் கொள்;
அப்பொழுது அவர் (இயேசு) உன் பாதைகளைச்
செவ்வைப்படுத்துவார். நீதிமொழிகள் 3 : 6

2.பரிபூரண பாசம்

எப்போதுமே சிடுசிடுவெனவே மரியா காணப்படுவாள் பள்ளியில் அவளுக்கென்று ஒரு பெயர் உண்டு அதுதான் "சிடு மூஞ்சி" சிறுவயதில் இருந்தே தந்தையை இழந்தவளாய் தாயின் அரவணைப்பில் வளர்ந்ததால் அப்படியே வளர்ந்துவிட்டாள்.

மரியாவுக்கு கோபம் வந்துவிட்டாலே அம்மா அமைதியாகிவிடுவார்கள். ஏதேனும் பேசிவிட்டால் பாத்திரங்கள் பறந்துவிடும். சில நேரம் சில பாத்திரம் தெருவில் நடந்து செல்லும் சில நபர்களைப் பதம் பார்த்திருக்கிறது.




அம்மா அடிக்கடி சொல்கிற வார்த்தை "உன்னை எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்திட்டு இருக்கேன் என் மீது நீ கோபப்படாதேம்மா" அதற்கு மரியா சொல்கிற பதில் "என்னை கடவுள் ஏன் தான் இந்த கஷ்டப்படுகிற வீட்டுல பிறக்க வைத்தாரோ."

அம்மாவின் ஜெபம் தினந்தோறும் என் மகள் நல்ல பிள்ளையா கோபப்படாமல் இருக்கணும் என்பதாகவே இருக்கும். வீட்டில் சாப்பாடு எதுவாய் இருந்தாலும் அப்படியே தூக்கி வீசி விடுவாள்.

வீட்டில் மரியா பயங்கரமாக கோபப்படுகிறாள் என்று சபை போதகருக்கு அறிவிக்கப்பட்டது. மரியா ஏம்மா இப்படி கோபப்படுகிறாய்? என்ற போதகரின் வார்த்தையைக் கேட்டதும் மரியா நான் மட்டும்வேறு எங்காவது பிறந்திருந்தா எப்படி சந்தோஷமாக இருந்திருப்பேன் என்றாள்.

இதை கேட்டதும் போதகர் நான் உனக்கு ஒரு உண்மையை சொல்லியாக வேண்டும். நீ பிறந்த இடம் யாருக்குமே தெரியாது. ஆனால் "நீ கிடந்த இடம் குப்பைத்தொட்டி. உன்னை யாருமே கண்டு கொள்ளவில்லை. ஆனால் உன்னை எடுத்து தன் சொந்த குழந்தையாய், திருமணமே செய்து கொள்ளாமலே தன் வாழ்வை உனக்காக அர்ப்பணித்து, பல சோதனைகளை கடந்து உனக்கு வேண்டிய எல்லா காரியத்தையும் குறைவில்லாமல் தான் சாப்பிடாவிட்டாலும், உன்னை சாப்பிட வைக்கும் உன் அம்மாவின் பாசத்தை நீ மறந்திடாதே" என்றதும், மரியா ஏங்கி ஏங்கி அழுதாள்.



வீட்டிற்கு வேகமாய் ஓடி, அம்மாவின் கால்களை பிடித்து கதறி அழுதாள் "எப்படிம்மா என்னை வளர்க்க, உன் வாழ்வை அர்ப்பணிச்ச" என்று அழுதாள்.

“ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்ம எல்லோரும் வாழ பாசமாய் சிலுவையில் தன்னையே பலியாய் கொடுத்தார். அந்த பாசம் தான் உன் மேல் பாசம் வைக்க வைத்தது மரியா.

உடனே நல்ல பிள்ளையாய் ஜெபிக்க ஆரம்பித்தாள். உண்மையான அன்பை புரிந்துகொண்டாள். இயேசப்பா அவள் கோபக் குணத்தை மாற்றினார். மறுநாளே மரியா பள்ளிக்குச் செல்லும் பொழுது மாணவர்களும், ஆசிரியர்களும் அவள் முகத்தை பார்த்து சிரித்தமுகமாய் இருக்கிறாளே என்று பாராட்டினார்கள்.

நீ சிடுமூஞ்சியா, சிரித்தமுகமா? யோசித்து பாரு தம்பி தங்கச்சி...

****

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.
ரோமர் 5 : 8

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3 : 16

****

3. நன்றி மீண்டும் வருக !!

"கடை களில் திருடி திருடி போர் அடித்துவிட்டது. இனி பெரிய வீடாய்ப் பார்த்து திருடினால் தான் நம்ம குடும்பத்தைக் காப்பாற்ற முடியும்" என்று தன்னந்தனியே திருடன் ஒருவன் புலம்பிக் கொண்டிருந்தான்.

இரவு 11 மணி வீதிகளில் சுற்றி வந்து கொண்டிருக்கையில், பல வீடுகளில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது. ஒரு வீட்டில் மட்டும் விளக்குகள் அணைக்கப் பட்டிருந்தது. துணிந்து இறங்கி விட்டான். மனதிற்குள் ஒருவிதபயம்... "ஏற்கனவே ஒரு வீட்டில் இறங்கி நாய்கடித்து இன்னும் 7 நாள் கூட ஆகவில்லையே" நாய், பூனை என்றாலே ஒரே பயம் தான் அவனுக்கு, உள்ளே சென்று தேடிப் பார்த்ததும் பெரிய பொருள் ஒன்றும் அகப்படவில்லை.



ஒரு சில பொருட்களை திருடி, வெளியே வரும்பொழுது அவன் கண்ணில் பட்ட கம்ப்யூட்டரையும் கழற்றி விட்டான். வீட்டை விட்டு வெளியே வரும் பொழுது வாசலில் ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது, அது என்ன "நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் நன்றி மீண்டும் வருக" என்று. அடுத்த வாரமும் வருவேன் என மனதிற்குள் சொல்லிக் கொண்டே சந்தோஷ களிப்பில் சென்றுவிட்டான்.

அடுத்த வாரமும் அந்த வீடு அவனுக்கு ஞாபகம் வந்தது. மீண்டும் வருகன்னு கூப்பிட்ட வீட்டிற்கு போகாமலிருக்க முடியுமா என்று சிரிப்பாக அவனுக்குள் ஒரு கேள்வியை கேட்டுக்கொண்டே அந்த வீட்டிற்குச்

செல்லவே, வீட்டில் ஒரு அறையில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது. என்னதான் பேசுகிறார்கள் என கேட்டுக் கொண்டே இருந்தான். அந்த வீட்டில் சிறுவன் ஜெபிக்கும் பொழுது "ஆண்டவரே போனவாரம் எங்க வீட்டில் திருடிச் சென்ற அந்த அண்ணாச்சிய ஆசீர்வதிங்க. அவங்களுக்கு கஷ்டம் இருக்கிறதால தான திருடுறாங்க. அவங்க கஷ்டத்தை மாற்றுங்க செழிப்பான ஆசீர்வாதத்தை கொடுங்க" என்று ஜெபித்துக் கொண்டிருக்கும் போதே திருடன் அழுது கொண்டே ஜெபத்தில் கலந்து கொண்டு மனம் மாறினான்.



திருடனுக்கு சிறுவனின் தந்தை ஒரு நல்ல வேலையை வாங்கிக் கொடுத்தார். குடும்பமாய் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு நல்ல பணியைச் செய்ய ஆரம்பித்தார் திருடன். Sorry திருடன் அல்ல மனம் மாறிய நல்ல மனிதர்.

பகை விரோதங்களை எழுப்பும். அன்போ சகல பாவங்களையும் மூடும். நீதிமொழிகள் 10 : 12

ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன். நீதிமொழிகள் 11 : 30

4. அழுக்கு கை

ஐஸ் என்றாலே ஷீலுவுக்கு ரொம்ப பிடிக்கும். ஐஸ் வண்டிக்காரர் வந்து விட்டாலே போதும் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும், அப்படியே வைத்து விட்டு வேகமாக ஓடிவிடுவாள். அப்பா ஒரு Chain Smoker, எப்பொழுதுமே சிகரெட்டும் கையுமாகத்தான் இருப்பார், ஆனால் ஷீலுவுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டே இருப்பார்.

நல்ல பிள்ளையா இருக்கணும். கெட்ட நண்பர்களுடன் சேரக் கூடாது. நல்ல வார்த்தையை மட்டுமே பேசணும். கெட்ட வார்த்தை பேசக் கூடாது என்ற அறிவுரை எப்பொழுதும் ஷீலுவுக்கு ஒலித்துக் கொண்டே இருக்கும்.



சிகரெட் புகை அம்மாவிற்கு ஒத்துக் கொள்ளவே செய்யாது. ஷீலு அப்பாவிடம் சொல்லி பார்த்தாலும் பலன் ஒருநாளும் இருந்ததில்லை. ஒரு நாள் ஐஸ் வியாபாரி வரவே ஷீலு விளையாடிக் கொண்டிருந்தாள். அப்பாவின் குரல் வீட்டின் உள்ளே இருந்து ஒலித்தது

“ஷீலு அப்பாவிற்கும் ஒரு ஐஸ் வாங்கிட்டு வா” சரிப்பா என்று ஷீலு உற்சாகமாக கூறினாள். ஐஸ் வாங்கி வந்ததும் அப்பாவிற்கு கோபம் வந்தது. “ஏம்மா இப்படி அழுக்கு கையினால் ஐஸ் வாங்கிட்டு வந்திருக்கீயே உனக்கு அறிவு இல்ல, அழுக்கோடே நான் சாப்பிட்டா எனக்கு நோய் வராதா...” என்று சொன்னதும் அமைதியாக ஷீலு பேச ஆரம்பித்தாள்.

“ஏம்பா இந்த அழுக்கு கையினால் ஐஸ் சாப்பிட்டாலே நோய் வரும்ன்னு சொல்றீங்க. உங்க அழுக்கு வாயால நம்ம வீட்டுல எத்தனை பேருக்கு நோய் வரும்ன்னு யோசிச்சி பாத்தீங்களா? எனக்கு advice பண்ற நீங்க ஒரு முன்மாதிரியா இருக்க வேண்டாமா? சிகரெட் குடிக்கிறதால எவ்வளவு கேடு தெரியுமா?” என்றதும் தந்தை கண்களில் கண்ணீர் கசிய ஆரம்பித்தது ஆண்டவராகிய இயேசுவும் நம்ம நல்லவர்களாக, அவரை முன் மாதிரியாகக் வெழிச்சாலையிலே நிற்காம... கிறார் பா.

நீயும் சின்ன சின்ன காரியத்திலேயும் சோர்ந்து போய
“எங்களுக்கு
யாருக்கு லாபம்? உனக்குத்தான் நஷ்டம். “சோர்வு,
முக்கியம், இனி
வரும்பொழுது சோர்ந்து போய் உட்காராமல் இயேசுவை நம்பி
கேட்ட தந்தை
னிந்து செல். வேகமாய் வெற்றியும் பெறுவாய் “எப்படி ஜேம்ஸ்”
ஆண்டவரின்
கேட்டவுடனே “மாமா நான் இனி By Pass Rider Bus போல
முன் வைத்து வேகமாக செல்வேன்”

❋❋❋❋❋

ன் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது.

முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய். மத்தேயு 7 : 5

நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். ரோமர் 2 : 1

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

5. BY PASS RIDER BUS போல...

சின்ன பிரச்சனைகளுக்குக் கூட சோர்ந்து போய் உட்கார்ந்து விடுவான் ஜேம்ஸ். ஒரு நாள் பள்ளிக்கு வருவான் அடுத்த நாள் தலைவலி என்று விடுமுறை எடுத்துக் கொள்வான். விளையாட்டாய் Friends சொல்லுகிற சில வார்த்தைகளுக்குக் கூட சோர்ந்து போய் விடுவான். சோர்ந்து போய்விட்டாலே யாரிடமும் பேச மாட்டான். என்ன செய்வதென்றே அப்பாவுக்கும், அம்மாவிற்கும் தெரியவில்லை.

பள்ளி விடுமுறையானதால் ஜேம்ஸின் மாமா திரு. பாஸ்கரன் மதுரையில் இருந்து ஜேம்ஸை பார்ப்பதற்காக வந்திருந்தார். ஜேம்ஸின் எல்லா காரியங்களையும் அப்பா, மாமாவிடம் விளக்கமாகவே கூறினார்கள்.



மாமாவும் பேசி பார்த்தார் பலன் இல்லை "ஜேம்ஸ் இன்று என்னுடன் கூட மதுரை வருகிறாயா? என மாமாவின் குரல் கேட்டவுடனே "சரி மாமா" என்றான் ஜேம்ஸ். இருவரும் மதுரை செல்ல பேருந்துநிலையம் வந்தார்கள், ஒரு சாதாரண மதுரை பஸ்ஸில் ஏறினார்கள். அனைத்து இடங்களிலும் பஸ் நின்று நின்று 5½ மணி நேரம் கழித்து மதுரை போய் சேர்ந்தது கூடவே Tension + ஜேம்ஸிற்கு தலைவலியும் சேர்ந்து வந்தது.

"பிரயாணம் எப்படி ஜேம்ஸ் இருந்தது" மாமா கேட்டவுடனே, "ரொம்ப போர்" என அலுப்பாக ஜேம்ஸ் பதில் கூறினான். 4 நாட்கள் மதுரையில் தங்கி ஜாலியாக இருந்துவிட்டு மதுரையில் இருந்து ஜேம்ஸ் ஊருக்கு கிளம்ப ஆரம்பித்தான். மாமாவுடன் பேருந்துநிலையம் வந்தவுடனே ஜேம்ஸ் மாமாவிடம் "மாமா இன்னைக்கு சாதாரண பஸ்லபோக வேணாம், வேற பஸ்லபோவோம்" என்றான் By Pass Rider என்ற புறவழிச்சாலை பஸ் கிளம்பும் நிலையில் இருந்தது. இருவரும் அதில் ஏறிக் கொண்டனர்.

2½ மணி நேரத்தில் திருநெல்வேலி பேருந்துநிலையத்தை அடைந்தது. மாமா கேட்பதற்குள் ஜேம்ஸ், "பஸ் பிரயாணம் ஜாலியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது மாமா" என்றான். தம்பி பஸ் அனைத்து இடத்திலேயும் நின்று நின்று சென்றவுடனே உனக்கு வெறுப்புதான் ஏற்பட்டது. பஸ் புறவழிச்சாலையிலே நிற்காமல் சென்றதும் சந்தோஷம் கிடைத்தது போல நீயும் சின்ன சின்ன காரியத்திலேயும் சோர்ந்து போய் நின்றுவிட்டால் யாருக்கு லாபம்? உனக்குத்தான் நஷ்டம். "சோர்வு, சோதனை" வரும்பொழுது சோர்ந்து போய் உட்காராமல் இயேசுவை நம்பி ஜெபித்து துணிந்து செல். வேகமாய் வெற்றியும் பெறுவாய் "எப்படி ஜேம்ஸ்" என மாமா கேட்டவுடனே "மாமா நான் இனி By Pass Rider Bus போல இயேசுவை முன் வைத்து வேகமாக செல்வேன்"

ஜேம்ஸின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது.

உங்க வாழ்வு எப்படி?

சாதாரண பஸ்ஸா, By Pass Rider Busஸா?...

சோர்ந்து போகிறவனுக்கு அவர் (இயேசு) பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்.

ஏசாயா 40 : 29

6. அவசர சிகிச்சை

அருண் என்றாலே கோபத்தின் அடையாளம் என்றே அப்பள்ளி மாணவர்கள் கூறுவார்கள். கோபம் வந்தாலே நாலுபேர் கையையாவது கன்னத்தையாவது அடித்து நொறுக்கி விடுவான்.

தாத்தாவின் வேலையெல்லாம் அருண் பள்ளி செல்லும் போது "இன்னைக்காவது யாரையும் அடிக்காதப்பா" என்ற வார்த்தையை தினமும் சொல்லி அனுப்புவதுதான்.

பாட்டியின் வேலை "ஊர்வம்புல மாட்டிக் கொள்ளாதே" என்று சொல்வது தான்.



அப்பா, அருண் கேட்காமலே பணத்தை கொடுத்துவிடுவார் ஏன் என்றால் பணம் கொடுக்காவிட்டால், பீரோவில் பல பண கட்டுக்கள் காணாமல் போய்விடும் என்பதால்.

அன்றைக்கு பள்ளி ஆண்டுவிழா என்பதால் 9ஆம் வகுப்பு படிக்கும் அருண் பேச்சு போட்டியில் பெயர் கொடுத்திருந்தான். அருண் பேசிக்கொண்டிருந்த போது, திக்கி திக்கி பேசினான். 11ஆம் வகுப்பு மாணவர்கள் இதை பார்த்து சிரித்ததும் அருணுக்கு பயங்கர கோபம் வந்தது. "விழா முடியட்டும் வெளியே வா ஒரு கை பார்த்து விடரேன்" என்று சொல்லிக் கொண்டே மேடையை விட்டு கீழே இறங்கினான்.

விழா முடிந்தது. பலத்த சண்டை அருண், சுரேஷ் என்ற 11ஆம் வகுப்பு மாணவனை தாக்கியதில் அந்த மாணவனின் தலையில் அடிபட்டு இரத்தக் காயங்களுடன் மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டான்.

அருணுக்கு பதற்றம் தொற்றிக் கொண்டது. என்ன செய்வதென்றே அருணுக்கு தெரியவில்லை. ஆலயத்தை நோக்கி வேகமாக ஓடினான் ''ஐயா ஒரு மாணவனை நான் அடித்துவிட்டேன் அவன் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகிறான். அவன் சுகம் பெற எப்படியாவது ஜெபம் பண்ணுங்கள் என்று சபை போதகரிடம் அருண் வேண்டிக் கொண்டான்.

ரு கேள்வி கேட்கிறேன், அதற்கு .

பார்ட் கேளுங்கள் என்றான். உடல் வலி

யை வீழ்த்த ஜிம் போகிறேன் என்கிறாய்.

வலிமையாக இருந்தால்தானே உன்னை நோக்கி

''அருண் உன்னையும் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்க வேண்டும் நீ ஆயத்தமா'' போதகர் கேட்டவுடனே ''என்ன நான் நன்றாகத்தானே இருக்கிறேன், என்ன சொல்றீங்க'' அருண் அப்பாவியாய் கேட்டான். ''ஆமா ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உனக்கு அறுவை சிகிச்சை செய்ய நீ இடம் கொடுக்க வேண்டும். அப்போதான் உன் கோபம் மாறும், அன்பு கிடைக்கும்'' என்ற போதகரின் வார்த்தையை கேட்ட அருண் மனங்கசந்து அழுது ஒப்புக் கொடுத்து ஜெபித்தான். நல்ல மாணவனாக மாறினான்.

சுரேஷ் நல்ல சுகம் பெற்றான். அருண் அனைவரிடமும் சாந்த குணமுள்ளவனாய் மாறினான்.

உங்களுக்கு அவசர சிகிச்சை தேவையா?

கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.

எசேக்கியேல் 36 : 26

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான் ; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.

II கொரிந்தியர் 5 : 17

7. நானும் ஜிம்முக்கு போகிறேன்

சின்ன வயதில் இருந்தே ராபர்ட்டுக்கு ஒரு ஆசை உண்டு. பயில்வான் போல கட்டுமஸ்தான உடல் வேண்டும் என்று தான். பள்ளி செல்லும் பொழுது வழியருகே ஏதேனும் கல் கிடந்தால் அப்படியே தூக்கி விடுவான். வெளியே போடுவதற்கு எல்லாம் அருண் பயப்படுவதற்காக. பல முறை புளியமரத்தில் ஞு யாரையும் அடிக்காதப்பா'' என்ற வா ஆனாலும் அவன் எதைப் அனுப்புவதுதான்.

ாட்டியின் வேலை ''ஊர்வம்புல மாட்டிக் கொள்ளாதே'' எ ால்வதெல்லாம் ''அப்பா நான் ஜிம்முககு போகணும் என்னை எப்படியாவது சேர்த்துவிடுங்கப்பா'' ''டேய் நீ பெரியவனா வளர்ந்த பிறகு ஜிம்முக்கு போகலாம் டா'' என்று அப்பா கூறினாலும் ராபர்ட் விடுவதாகவே இல்லை.



ராபர்ட் ஆசையும் ஒரு நாள் நிறைவேறியது. ''நீ அரையாண்டு பரீட்சையில் நல்ல மார்க் எடுத்து வெற்றி பெற்றால் உன்னை ஜிம்மில் சேர்த்து விடுகிறேன்'' என்று அப்பா சொன்னவுடனே அதுவரைக்கும் ராபர்ட்டுக்கு படிப்பில் இல்லாத ஆர்வம் படு குஷியாக ஆரம்பமானது. ஜிம்க்கு எப்படியாவது போகவேண்டும் என்ற எண்ணத்தால், ஊரெல்லாம் சொல்லி விட்டான் நான் ஜிம்முக்கு போகப் போறேன் என்று.

ஒரு பெரியவரிடம் ஒரு நாள் ராபர்ட் பேசிக் கொண்டு இருக்கையில், ''நீ எதுக்குப்பா ஜிம் போகணுமின்னு ஆசைப்படுகிறாய்?'' என்று கேட்டவுடன், ''நான் பயில்வான் மாதிரி ஆகி, எதிரி யாராவது வந்தால் அடித்து விரட்ட வேண்டும். அதுமட்டுமில்ல என்னை பார்த்து எல்லோரும் பயப்பட வேண்டும்'' என்று ஆசைப்பட்டு தான் ஜிம்க்கு போகப் போறேன் என்றான்.

நான் உன்னிடம் ஒரு கேள்வி கேட்கிறேன், அதற்கு பதில் சொல்வாயா? என்று கேட்டதும் ராபர்ட் கேளுங்கள் என்றான். உடல் வலிமைக்காக ஜிம் போகிறாய், எதிரியை வீழ்த்த ஜிம் போகிறேன் என்கிறாய்.

உன் மனம் வலிமையாக இருந்தால்தானே உன்னை நோக்கி வரும் சோதனை, வேதனை, துன்பம், தோல்வி என்கிற எதிரிகளை வீழ்த்த முடியும் என்றதும், ''மனம் வலிமை பெற எந்த ஜிம் போகணும்'' என்று ராபர்ட் கேட்டான்.

''தம்பி நீ எந்த ஜிம்முக்கும் போக வேண்டாம் நீ இருந்த இடத்திலே ஆண்டவராகிய இயேசுவே என்னை, என் மனதை பரிசுத்தப்படுத்தும் தைரியப்படுத்தும் என்று சொல்லி நீ தினமும் ஜெபித்து வேதம் வாசித்தாலே போதும், அதுவே உன் மனதை வலிமையாக்கிவிடும்.'' என்ன தம்பி புரிகிறதா என்று கேட்டவுடனே ஐயா உடல் வலிமைக்கு ஜிம் போல, மன வலிமைக்கு ஜெபம் முக்கியம். இனி தினமும் மனவலிமைக்கான ஜிம் போயிட்டுதான் உடல் வலிமைக்கான ஜிம் போவேன் என ராபர்ட் தைரியமாய் கூறினான்.

நீங்களும் ஜிம்க்குக் கிளம்பிட்டிங்களா?

பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். சகரியா 4 : 6

8. விபத்துப் பகுதி

வாராவாரம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணி ஆனாலே போதும், ஞானமணி தாத்தாவின் திகில் கதையைக் கேட்க சிறுவர்களின் கூட்டம் ஊர் மண்டபத்தில் அலைமோதும்.

அன்றும் அப்படித்தான்... வெள்ளிக்கிழமை 7 மணி ஆனது. சிறுவர்கள் கூட்டம் அலை மோதியது. தாத்தாவைக் காணவில்லை, எல்லோரும் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்ட கேள்வி என்ன தெரியுமா? "தாத்தா கதை சொல்ல வருவாரா? இல்லை நாம அவரைத் தேடி போகணுமா..." கேள்விகளை மாறி மாறி கேட்டுக் கொண்டிருக்கையில், ஒரு அதிர்ச்சி செய்தி அவர்களை தேடி வந்தது. "தாத்தா சைக்கிளில் வரும் போது வளைவான விபத்து பகுதியில் விபத்தில் மாட்டிக் கொண்டார்." என்ற செய்தியை கேட்டதும் அனைத்து பிள்ளைகளுமே கண் கலங்கிய படியே "கதை" கிடையாதா? என மனதிற்குள் கேட்ட வண்ணம் கலைந்து சென்றார்கள்.



அந்தக் கூட்டத்தில் ஜெரோன் மட்டும் யோசித்துக் கொண்டே போன வாரம் தாத்தா சொன்ன "விபத்துப் பகுதியில் பாதுகாப்பாக போகணும்" என்ற கதை ஜெரோன் மனதில் ஓடிக் கொண்டே இருந்தது.

அந்த கதை தான் என்ன?...

இருவர் மோட்டார் சைக்கிளில் வேகமாக சென்று கொண்டிருந்தார்கள். விபத்துப் பகுதி என்று வாசகம் பொறிக்கப்பட்ட போர்டு வந்தது, அதை அவர்கள் சமாளித்துவிடலாம் என எண்ணி வேகமாகசென்றார்கள்.

சமாதியாகி விட்டார்கள். தம்பி தங்கச்சி நீயும் இந்த உலகில் வாழும் பொழுது விபத்துப் பகுதியில் பார்த்து மெதுவாகத் தான் செல்ல வேண்டும். நாம சமாளித்து விடலாம் என தைரியமாய் செல்லாதே என்று தாத்தா கூறிமுடித்தவுடன், விபத்துப் பகுதி என்றால் என்ன? என தாத்தாவிடம் கதை கேட்ட சிறுவர்களில் ஜெரோன் மட்டும் கேள்வி கேட்டான்.

உடனே ''தாத்தா விபத்துப் பகுதின்னா கெட்ட நண்பர்கள் கூடுகிற இடம், டிவியில் ஆபாச படம் வரும் இடம், பெற்றோரை மதிக்காத இடம், படிக்க வேண்டிய நேரத்தில் நன்றாக விளையாடும் இடம், இதுபோன்ற நிறைய இடங்களுக்கு விபத்துப் பகுதி என்று பெயர்'' என்று சொன்னவுடனே, ஜெரோன் ''புரிந்தது தாத்தா'' என கூறினான்.



இந்த கதையை யோசித்துக் கொண்டே ஜெரோன் ''நாம் உலகப் பிரகாரமான விபத்துப் பகுதியிலேயும், ஆத்ம பிரகாரமான விபத்துப் பகுதியிலேயும் நிதானமாக யோசித்து ஜெபித்து பொறுமையாய் செல்ல வேண்டும் என தீர்மானித்துக் கொண்டே, தாத்தா நல்ல சுகம் பெற்று, அடுத்த வாரம் கதை சொல்ல வரணும் இயேசப்பா'' என்று ஜெபித்துக் கொண்டே வீடு சென்றான் ஜெரோன்.

விபத்துப் பகுதியில் நீங்களும் பார்த்துப் போங்க...ok take care.

" துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்...

சங்கீதம் 1 : 1

9. கெட்டுப் போன பண்டம்

கல்யாண வீட்டு சாப்பாடுன்னா ஐசக்குக்கு ரொம்ப பிடிக்கும். வீட்டில் பெற்றோரோடு ஒரு முறையும், தனியாக போய் ஒரு முறையும் சாப்பிட்டால் தான் அவனுக்கு திருப்தியாக இருக்கும்.

அன்றைய தினம் ஒரு முக்கியமான பணக்கார வீட்டில் விருந்து என ஐசக்குக்கு தெரியவரவே "அப்பா நமக்கு பத்திரிக்கை தந்தார்களா?" என அப்பாவிடம் கேட்டதும் 'ஆமா' என உற்சாகமாக தலை அசைத்தார்.

குடும்ப சகிதமாக ஐசக் சென்றான். அப்பா, அம்மா மற்றும் தங்கை என அனைவரும் சென்றாலும் ஐசக்கை பார்த்து மட்டும், அப்பா சொன்ன வார்த்தை "தனியாக மறுபடியும் வந்து சாப்பிடக் கூடாது சரியா " என்று கேட்டவுடனே "சரிப்பா" என கிளம்பிச் சென்றான்.

நல்ல கூட்டம் உள்ளே நுழைவதற்கு வாய்ப்பே இல்லை என்றாலும் வேகமாக போய் ஐசக் இடம் பிடித்து விட்டான்.

அனைவரின் பேச்சும் ஒரே விதமாக இருந்தது. "14 கூட்டு என்ன அருமை" "இலைய கொண்டு வாங்கப்பா" என ஐசக் கூச்சலிட்டான். அப்பாவின் கண் விழியைப் பார்த்ததும் "ஒன்றுமில்லப்பா எல்லாரும் பசியில துடிக்கிறாங்களே அதான் சொன்னேன்" என ஒன்றும் தெரியாதவனாக பேசினான்.

விதவிதமான கூட்டுகளுடன் ஜாங்கிரி மற்றும் லட்டும் பரிமாறப்பட்டது யாரும் அக்கம் பக்கம் திரும்பி பார்க்கவே முடியாத அளவிற்கு சாப்பாட்டு இலையில் பல ஊர்களே தங்கி இருந்தது. கூட்டு வடிவில்.

“டேய் ஜெபம் பண்ணிட்டு சாப்பிடு என அப்பா சொன்னதும் ஜாங்கிரியை வாயில் வைத்தவனாக “சரிப்பா” என்றான்.

அப்பா சாப்பாட்டை சாப்பிட்டுக் கொண்டே “டேய் அந்த முள்ளங்கி கூட்டையும், ஜாங்கிரியையும் சாப்பிடாதே” அது ஒரு மாதிரி கெட்டுப் போனது மாதிரி இருக்கு எல்லா இலையிலேயும் மக்கள் அப்படியே வச்சிருக்காங்க யாரும் சாப்பிடல, நீயும் சாப்பிடாதே என ஐசக்கிடமும், தங்கையிடமும் சொன்னார்கள்.



ஐசக் “போங்கப்பா கெட்டுப்போனது எனக்கு ஒண்ணும் செய்யாதுப்பா கல்லையும் கரைக்கிற வயசுப்பா” என சொல்லிக் கொண்டே அப்பா, அம்மா, தங்கை இலையில் இருந்த முள்ளங்கிக் கூட்டையும், ஜாங்கிரியையும் எடுத்துக் கொண்டான்.

தந்தை சொல்லியும் ஐசக் விடுவதாகவே இல்லை அடித்துப் புசித்து விட்டான். வீட்டிற்கு வந்ததும் ஐசக் பலமுறை வாந்தியாலும், வயிற்று வலியாலும் துடித்தான். மருத்துவமனைக்கு கொண்டு போகப்பட்டான்.

''கெட்டுப்போன பண்டம் சாப்பிட்டதால் Food poison என டாக்டர் சொன்னதும் ஐசக் தந்தையை பார்த்து ''இனி வேண்டாதது எதையும் சாப்பிட மாட்டேன்,'' என தலை அசைத்தான்.''ஆமா ஐசக் கெட்டுப்போன பண்டம் நம்முடைய சரீரத்தைக் கெடுப்பது போல கெடுதலான சில பாவங்களும் நம்முடைய ஆத்துமாவைக் கெடுத்துவிடும். நீ நன்றாக ஜெபித்து இனி இயேசுவின் பிள்ளையாக வாழணும் சரியா'' என அப்பா சொன்னதும் ''ம்'' என சொல்லிக் கொண்டே வீட்டிற்கு சென்றான்.

'' செத்த ஈக்கள் (பாவங்கள்) தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும். பிரசங்கி 10 : 1

10. டாமி தி கிரேட்

கன மழை, யாருமே வெளியில் வரமுடியாத அளவிற்கு தெருவெல்லாம் வெள்ளமாகவே காட்சியளித்தது. ரோட்டில் சைக்கிளில் போவோர் கூட நீச்சல் அடிக்க வேண்டிய நிலைமைதான்.

''டாடி இன்னைக்கு மட்டும் மழையில் நனைஞ்சிட்டு வரட்டுமா? என்று ஜார்ஜ் கேள்வியைக் கேட்டதும்'' ''சளி பிடிக்கும் போகக்கூடாது'' என கோபத்துடன் அப்பா சொல்லி விட்டு வீட்டிற்குள் சென்று விட்டார்.

''சரி கடைக்குப் போய் வீட்டுக்கு தேவையான சாமான்களையாவது வாங்கிட்டு வரட்டுமா'' என ஜார்ஜ் கேட்கவே, ''நல்ல காலத்திலே கடைக்குப்போ என்று சொன்னாக் கூட போக மாட்ட, இப்ப எப்படி? சரி சரி குடைக் கொண்டு போ மழையில் நனைஞ்சிடாதே சரியா'' அப்பாவின் சொல்லிற்கு உற்சாகமாக தலை அசைத்துக் கொண்டே சென்றான்.

அக்கம் பக்கம் சுற்றிப் பார்த்துக் கொண்டே சென்றான். மரத்தடியில் இலேசான காயங்களுடன் ஒரு அழகான நாய்க்குட்டி குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. சாப்பாடு கூட இல்லாமல் இரண்டு மூன்று நாட்கள் பட்டினியால் கிடப்பது போலவே ஜார்ஜ் கண்ணுக்குத் தெரிந்தது.

''அய்யோ பாவம் இப்படி குளிரில் நடுங்குகிறதே வீட்டிற்குக் கொண்டு போய் இதை கவனிக்கலாம்'' என ஜார்ஜ் எண்ணிக் கொண்டே நாய்க்குட்டியை தூக்கிக் கொண்டான். பாசத்தோடு அவன் மீது சாய்ந்து கொண்டது, நாய்க்குட்டி.

வீட்டை நெருங்கி வரும் போதுதான் ஜார்ஜிற்கு பயம். ஏற்கனவே ஒரு நாள் ஒரு கிளியை கொண்டு வந்ததற்காக பிரம்பு ஒடிய ஒடிய அப்பா அடித்த அடி கண்முன்னால் படமாக ஓடியது.

சரி பார்ப்போம் என வீட்டிற்குள் சென்றதும் "வீட்டில் அனைவருக்கும் கோபம், நாயை வீட்டிற்குள் கொண்டு வராதே வெளியில் விட்டுட்டுவா" என அப்பா, அம்மா, அண்ணன் என அனைவரும் சொன்னாலும் "அப்பா பாவமா இருக்கு கொஞ்ச நாள் வளர்த்த பிறகு வெளியே கொண்டுப் போய் விடுகிறேன்" என்ற ஜார்ஜின் சாந்தமான பதிலால் யாரும் ஒன்றும் சொல்லவில்லை. ஜார்ஜ்-ஐ தவிர யாரும் நாய்க்குட்டியை கண்டு கொள்வதே இல்லை.

அதற்கு டாமி என பெயர் வைத்தான். இரவு தூங்கும் போது கூட ஜார்ஜ் கூடவே படுத்துக்கொள்ளும். ஜார்ஜ் சாப்பாடு சாப்பிட்டால் தான் டாமியும் சாப்பிடும். அந்த அளவிற்கு ஜார்ஜ் மீது பாசம் வைத்திருந்தது. ஆனால் வீட்டில் உள்ளவர்கள் நாய்க்குட்டியை அலட்சியம் செய்தனர்.



ஒருநாள் பக்கத்து வீட்டில் ஒரு திருட்டு என அனைவரும் கண்ணீரும் கவலையுமாக இருக்கவே, டாமி நாய்க்குட்டி அந்த திருடனை அதே தெருவில் கண்டுபிடித்துக் கொடுத்தது. இதே போல் பல திருடர்களை டாமி காட்டிக் கொடுத்தது.

அந்த ஊர் பஞ்சாயத்து தலைவர் நாய்க்குட்டியை பாராட்டி "டாமி தி கிரேட்" என்ற பட்டம் கொடுத்தார். ஜார்ஜின், அப்பா, அம்மா, அண்ணன் என அனைவரும் சந்தோஷப்பட்டனர். அதுவரை நாய்க்குட்டியை திரும்பிக் கூட பார்க்காத அப்பா டாமியை தன் மார்போடு அணைத்து வீட்டிற்குக் கொண்டு வந்தார்.

ஆகாதது என எல்லோராலும் தள்ளப்பட்ட நாய்க்குட்டி, ஜார்ஜிடம் வந்ததால் அனைவரிடமும் பாராட்டினைப்பெற்றது. அதே போல, நீயும் Waste, ஒன்றுக்கும் உதவமாட்டாய் என, யார் உன்னை ஒதுக்கினாலும் இயேசுவிடம் உன்னை கொடுத்துப் பார். சிங்காரமாய் உன்னை மாற்றுவார்.

" **வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல் ஆயிற்று.** சங்கீதம் 118 : 22

11. மலை உச்சியில்...

குடும்பமாக கொடைக்கானலுக்கு டூர் சென்றார்கள். அப்பா, அம்மா குட்டிப் பொண்ணு சரண்யா. என்றைக்கும் இல்லாத அளவிற்கு அப்பா சந்தோஷமாக குட்டிப் பொண்ணு சரண்யா கேட்ட பொருட்களை எல்லாம் வாங்கி கொடுத்தார்.

''ஏம்ப்பா இவ்வளவு சந்தோஷமாக இருக்கீங்க'' என சரண்யா கேட்டதும் ''நாம சந்தோஷமா இப்பதான டூர் வந்திருக்கிறோம், அதான் செல்லம் சந்தோஷமா இருக்கேன்'' என்றார், ஆனால் அம்மாவின் முகத்தில் ஏனோ ஒரு சோகம் காணப்பட்டுக் கொண்டே இருந்தது. ''அம்மா நீ ஏன் சோகமாக இருக்கே.''

''இல்லடா, தலை வலிக்குது அதனால தான்'' என சரண்யா கேட்ட கேள்விக்கு அம்மா பதில் சொன்னாலும், 3ம் வகுப்பு படிக்கும் சரண்யாவிற்கே அதை நம்ப முடியவில்லை. அப்பாவின் செல்போன் மணி ஒலித்துக் கொண்டே இருந்தது மற்ற நேரத்தில் சந்தோஷமாக பேசும் அப்பா, போன் வரும்போது மட்டும் பதற்றத்தோடும், பயத்தோடும் பேசுவதையும் சரண்யா புரிந்து கொண்டாள்.

என்ன நடந்தது என சரண்யா நினைத்துப் பார்க்க ஆரம்பித்தாள். அப்பா வேலை பார்க்கும் கம்பெனியில் அருண் என்ற மாமாவும் வேலை பார்த்தார்கள். அருண் மாமா வீட்டில் பிரச்சனை என ஒரு 30 லட்சம் ரூபாய் தாங்க, அடுத்த வாரமே தருகிறேன் என சொல்ல, அப்பா மானேஜரிடம் வாங்கிக் கொடுத்தார்கள். அருண் மாமா, பல மாதங்கள் ஆகியும் பணத்தையும் கொடுக்கல, ஆளையும் காணோம்.

இதனால அப்பாவிற்கு பயங்கர சோதனை. அதான் பிரச்சனையோ? என தன் மனதிற்குள் சரண்யா நினைத்துக் கொண்டாள்.

பகல் முழுவதும் கொடைக்கானலை நன்றாக சுற்றிப் பார்த்தார்கள். இரவு ஒரு லாட்ஜில் குடும்பமாக தங்கினார்கள். சரண்யா தூங்குவது போல நடித்து கொண்டிருந்தாள். அப்பா அம்மா இருவரும் அழுது கொண்டே இருந்தார்கள். ''வீட்டையும், தோட்டத்தையும் விற்றாலும் கூட கடனை கொடுக்க முடியாதும்மா'' என தேம்பி அழுதார் அப்பா, அம்மாவிற்கு பேச்சே வரவில்லை, மாறாக கண்ணீர் தான் வந்தது. இதைக் கேட்ட சரண்யாவும் அழுது கொண்டே தூங்கி விட்டாள்.



அடுத்த நாள் மலை உச்சியில் போய் சுற்றிப் பார்க்க வேண்டும் என அப்பா அழைத்ததும் இருவரும் சென்றார்கள். சரண்யாவை அப்பா தூக்கிக் கொண்டார்.

''எப்படியாவது மலை உச்சியில் இருந்து குதித்து மரித்து விட வேண்டும்'' என தீர்மானித்தே அங்கு சென்றது, சரண்யாவிற்கு அப்போது தான் புரிந்தது. குதிக்கிற நேரத்தில் ''அப்பா அங்க பாருங்க அந்த கல்லில் ஏதோ எழுதியிருக்கு'' என சரண்யா சொன்னதும் என்னதான் என பார்க்க அப்பா ஆயத்தமானார்கள் அதில்

"உன் வாழ்வு சந்தோஷமாய் மாற

இயேசுவை நம்பி ஜெபித்து பார் அற்புதம் நடக்கும்"

என எழுதப்பட்டிருந்தது. கண்ணீரோடு ஜெபித்தார்கள். ஒரு சந்தோஷம் கிடைத்தது. அடுத்த கணமே போன் வந்தது "அருணை போலீஸ் பிடித்து விட்டார்கள், சீக்கிரம் வாங்க" என்று, சரண்யாவிற்கு அப்பா அம்மா இணைந்து முத்தங்களை கொடுத்து இயேசு நல்லவர், இனி அவரை மட்டும் நம்பி வாழ்வோம் என மலை உச்சியில் இருந்து கீழே இறங்கினார்கள்.

" கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார். சங்கீதம் 145 : 14

12. சிட்டுக்குருவி

“தாத்தா எனக்கு தூக்கம் வரல எனக்கு ஒரு கதை சொல்லுங்களேன்” என பேரன் பினேகாஸ் கேட்டதும், “தாத்தா சரி ஒரு கதை சொல்றேன் கேளு” என ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்தார். பினேகாஸ் எழும்பி நன்றாக உட்கார்ந்து கதையை கேட்க ஆரம்பித்தான்...

ஒரு காட்டில் கொடுமையான இரக்கமற்ற வேட்டைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் குணாதிசயமே கண்ணில் எதுபட்டாலும் உடனே வேட்டையாடிவிடுவான். மரங்களையும் அவன் விட்டுவைப்பதே இல்லை. அதே காட்டில் தன் ஐந்து குஞ்சுகளுடன் சிட்டுக்குருவி ஒன்று மரத்தில் கூடு கட்டி சந்தோஷமாக வாழ்ந்து வந்தது. வேடன் ஒவ்வொரு மரத்தையும் வெட்டி விற்பனை செய்து கொண்டிருந்தான்.



ஒரு நாள் சிட்டுக்குருவியின் குஞ்சுகள் “அம்மா நம் வீட்டையும் அந்த வேடன் இடித்து விடுவானா” என பாவமாக கேட்டன. “இடித்தாலும் இயேசு நமக்கு வேறு வீட்டை கட்டும்படியான திறமையையும் சக்தியையும் தந்திருக்கார். ஆகவே நாம கவலையே படக்கூடாது” என தைரியமாய் பேசியது தாய் சிட்டுக்குருவி. “இருந்தாலும் இப்படி கூட்டை கலைக்கிறவன்

நல்லாவே இருக்கக் கூடாதும்மா'' என குஞ்சுகள் சொன்னதும் "ஏய் நாம யாருக்கும் சாபம் போடக்கூடாது நமக்கு யாரும் துரோகம் செஞ்சாகூட நாம நன்மை தான் செய்யணும் இனி இப்படி பேசக் கூடாது சரியா" என சொல்லிக் கொண்டே, கொண்டு வந்திருந்த உணவுப் பண்டங்களை பரிமாறிக் கொண்டு இரவுப் பொழுதை கழித்தது.

அடுத்த நாள் அவர்கள் எதிர்பார்த்த படியே வேட்டைக்காரன் கூடு இருந்த மரத்தை வெட்டினான். "இனி தொலைஞ்சிபோ" என சொல்லிக்கொண்டே மரத்தை வெட்டினான். சிட்டுக்குருவி தன் குஞ்சுகளுடன் அடுத்த மரம் குடிபெயர்ந்தது. ஒவ்வொரு மரமாய் வேட்டைக்காரன் வெட்டிக்கொண்டு வந்தான். சிட்டுக்குருவி குஞ்சுகள் ஒவ்வொரு நாளும் பயந்து, பயந்து வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் வேட்டைக்காரன் மரம் வெட்ட வரவில்லை, ஏன் வரவில்லை என அவனைப் பார்க்க சிட்டுக்குருவி அவனுடைய வீட்டிற்குச் சென்று ஜன்னல் வழியாய் உற்றுப் பார்த்தது. "வேட்டைக்காரன் மரத்தில் ஏறியபொழுது வழுக்கி கீழே விழுந்துவிட்டான், எனவே இவன் பிழைப்பது கடினம். ஆனா சிட்டுக்குருவியை பொரித்து சாப்பிட்டால் நன்றாக இருக்கும்'' என மருத்துவர் கூறினார். மருத்துவர் சென்றதும் சிட்டுக்குருவி வேட்டைக்காரன் அருகில் சென்றது.

"வேட்டைக்காரா எழும்பு, எழும்பு" என சத்தம் போட்டது. வேட்டைக்காரன் எழும்பி உட்கார்ந்தான். நான் உனக்கு பல துரோகம் செய்திருக்கிறேன் நீபாவம், அதனால தான் கடவுள் எனக்கு இத்தண்டனையை கொடுத்துவிட்டார் என அழுதான்.

"வேட்டைக்காரா உன் உடம்பு சரியாக, என்னை பொரித்து சாப்பிடு. என் குஞ்சுகளை இனி சந்தோஷமாய் வாழ விடு'' என சொன்னவுடனே "நான் துரோகம் செய்தாலும், நீ நன்மை செய்கிறாயே எப்படி?'' என தேம்பி அழுது கொண்டே கேட்டான்.

"நீ படிக்கும் வேத புத்தகத்தில் சத்துருக்களை நேசி" என்று இயேசு சொன்னதை ஆலயத்தில் குருவானவர் சொன்ன போது நான் கேட்டிருக்கிறேன் என அமைதியாகச் சொன்னது.

"தாத்தா சிட்டுக்குருவி எவ்வளவு நல்ல காரியம் பண்ணியிருக்கு" என உற்சாகமாய் தாத்தாவிடம் பினேகாஸ் சொன்னதும் "நாமும் சிட்டுக்குருவியின் குணாதிசயப்படி நடக்கணும் சரியா பினேகாஸ்" என தாத்தா கேட்டவுடன் "சரி" என சந்தோஷமாய் ஜெபித்து தூங்க ஆரம்பித்தான்.

" உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு.

நீதிமொழிகள் 25 : 21

.... தீமையை நன்மையினாலே வெல்லு. ரோமர் 12 : 21

---

13. Tension-னா இருக்கு



"அரண்மனையில் இருந்து எப்பொழுதுதான் நல்ல செய்தி வருமோ? மாதம் ஒருமுறை அரசருக்கு ஏதேனும் சிந்தனை தோன்றுகிறது, இதனால் மக்கள் தான் பாதிக்கப்படுகிறோம், இதற்கு எப்போ தான் விடிவு பிறக்குமோ" என மரத்தடியில் உட்கார்ந்து தினமும் வெட்டி கதைகள் பேசுபவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் . அன்றைய தினம் காலமே அரசர் எழும்பும்போது ஒரு புது வித யோசனை அரசரை Tension ஆக்கியது...

அது என்ன பிரச்சினை " நாம் மரித்த பிறகு நம் வாழ்வு என்ன ஆகும்? எங்கே போவோம்" என்ற கேள்விகள் அரசரை சுற்றி வந்து கொண்டே இருந்தது. "மரித்த பிறகும் நான் சந்தோஷமாக வாழ என்ன செய்வது?" என யோசித்துக் கொண்டே அரண்மனையில் அனைவரிடமும் அரசன் சொன்ன வார்த்தை "Tension னா இருக்கு"

"அரசரின் Tensionஐப் போக்கி அரசரின் கேள்விக்கு தெளிவான பதில் சொல்பவருக்கு தகுந்த சன்மானமும், தட்டுமுட்டு சாமான்களும் பரிசாக வழங்கப்படும்", என அறிவிக்கப்பட்டது.

திங்கட்கிழமை காலை 10 மணி என அறிவிக்கவும் அனைவரின் கவனமும் பரிசை எப்படியாவது தட்டிச் செல்ல வேண்டும் என சொல்லி புதுசு புதுசாக யோசிக்க வேண்டும் என சொல்லிக் கொண்டார்கள்.

அரசவை ஆரம்பமானது முதலாவது ஒருவர் வந்தார் பயங்கரமாக அகோரமாக சிரித்துக் கொண்டே இருந்தார். "அரசே நீர் இப்படியே இருந்தால் 200வது வயது வரை உயிரோடே இருப்பீர்" என கூறவும் அரசரின் பதில், "இவனைத் தூக்கி சிறுத்தை அறையில் அதற்குத் துணையாக போட்டு விடுங்கள்" என்று. உடனே காவலாளிகள் அலேக்காய் தூக்கிச் சென்றார்கள்.

இரண்டாவது ஒருவர் Magic ஒன்றை பண்ணி, இப்படித்தான் நம் வாழ்வும் இருக்கும் என்று கூறி அரசருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் வெறுப்பை உண்டாக்கினான். "இவனை சிங்கத்தின் தலைமாட்டில் தூக்கிப் போடுங்கள்" என்று சொல்லி முடிப்பதற்குள், அள்ளிச்சென்றனர் காவலாளிகள்.

இப்படியாக ஒருவர் பின் ஒருவராக வரவே அரசரின் Tension இன்னும் அதிகமானது. கடைசியாக பார்வையற்ற மாற்றுத்திறன் கொண்ட ஒரு சின்னப்பையன் "நான் அரசரிடம் பேசவேண்டும்" என சொன்னதும் அனைவரும் வெளியே போ என்று விரட்டினாலும், "அரசர் உள்ளே வா. ம்... சொல்லு" என கூறவும், கூற ஆரம்பித்தான் தன் கவிதையை.

" உலக வாழ்க்கை ஒரு மண்ணைய்யா
உளறி உளறி வாழ்ந்தால் அதில் மதிப்பில்லை ஐயா
உண்மை வாழ்க்கை உள்ளது ஐயா
உன்னதர் இயேசுவின் வழிதான் அது ஐயா
நித்திய வீடும், நிரந்தர நன்மையும் நமக்கு ஐயா
நீங்கா நன்மை செய்தால் தான் பரலோகம் ஐயா
நம்பி வா இயேசுவை நம்பி வா இயேசுவை "

என தன் கவிதையை முடித்ததும், மாற்றுத்திறன் கொண்ட இந்த சிறுவனே இவ்வளவு நம்பிக்கையாய் சொல்லும்போது அதுதான் உண்மை என அறிந்தவராய் ஜெபித்து நம்பிக்கை பெற்றார். Tension போனது. சிறுவனுக்குப் பரிசும் கிடைத்தது.

நானே (இயேசு) வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

யோவான் 14 : 6

14. திசையன்விளை சந்தையில்...

கல்லூரியில் முதலாமாண்டு உயிரியல் படிக்கும் மாணவன் மோசஸ். ஜாலியாகவே பொழுதைக் கழிப்பது அவன் வேலை. பரீட்சை வரும்பொழுது மட்டும் புத்தகத்தைத் தொட்டுப் பார்க்கும் பழக்கம் உடையவன். ஆலயத்தை நேசிக்க வேண்டும், ஊழியம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடே அவனுக்கு மோசஸ் என்று வீட்டில் பெயர் வைத்திருந்தார்கள். ஆனால் அதற்கு நேர் எதிராக மோசஸ் காணப்படுவான்.

ஆலயம் என்றால் என்ன என்று கேட்கிற அளவிற்கு மோசஸ் வில்லன் தான். வேதம் வாசித்து, ஜெபம் பண்ணுடா என்று அப்பா சொல்லும் போது ''அப்பா ஒரு 60 வயது ஆன பிறகு பார்க்கலாம், இப்ப ஜாலியா இருக்க வேண்டிய நாட்கள் அதை விட்டுட்டு ஆலயம், வேதமின்னு இப்பவே சன்னியாசி ஆக கூடாதுப்பா'' என சொல்லிக் கடந்து செல்வான்.

எப்பவுமே அம்மாவின் ஜெபம் ''மோசஸ் இரட்சிக்கப்படவேண்டும் நன்றாக படிக்க வேண்டும், ஆலயம் வர வேண்டும்'' என்பதாகவே இருக்கும்.



அப்பா "இந்த காலத்தை பயன்படுத்தி வாழணும்டா, நம்ம உடம்பில் தெம்பு இருக்கும் போதே ஆண்டவரை நேசிக்கணும்டா" என்று சொல்லும் போது "போங்கப்பா உங்களுக்கு ஒண்ணுமே தெரியாது" என்று அனைத்தும் தெரிந்தவன் போல் மோசஸ் கிளம்பிச் செல்வான். மோசஸ் வாழ்வை நினைத்து நினைத்து அப்பா, அம்மா இருவரும் சாப்பாடு என்பதை பல நாள் மறந்தே போய்விட்டனர்.

ஒரு நாள் அம்மா சந்தைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள், காய்கறி வாங்குவதற்காக. "அம்மா நானும் வருகிறேன் நல்ல காய்கறியா நான் Select பண்ணுறேன்" என்ற மோசஸிடம் "சரி வா" என அம்மா அழைத்தார்கள். திசையன்விளை சந்தை என்றாலே கலகலப்புக்கு பஞ்சம் இருக்காது பரபரப்பாகவே காணப்படும். நெல்லை ரயில் நிலையத்தில் தொலைந்தால் கூட கண்டுபிடித்து விடலாம், ஆனால் திசையன்விளை சந்தையில் தொலைந்தால் கண்டுபிடிப்பது கொஞ்சம் கஷ்டம்தான்.

கூட்டத்தின் மத்தியில், எப்போதுமே மோசஸ் அம்மா வாங்கும் காற்கறி கடைக்குச் சென்றார்கள் "கடைக்காரரிடம் ஒரு கிலோ அழுகிப்போன அவரை, அரை கிலோ அழுகிப்போன கா்ரட், கால் கிலோ அழுகிப்போன பீன்ஸ், அரை கிலோ அழுகிப்போன உருளை தாங்க" என அம்மா சொன்னவுடன், மோசஸ்க்கு மட்டுமல்ல, கடைக்காரருக்கும் ஆச்சர்யமாக இருந்தது. ஏம்மா இப்படி கேட்கிற Freshகாய்கறி தானே நல்லா இருக்கும்.

அழுகிப்போனதா! "ச்சே...சே... நம்ம வீட்டு நாய் கூட சாப்பிடாது என்றமோசஸிடம் அம்மா அமைதியாக கேட்டார்கள் "உனக்கு எல்லாமே Freshசா தான் வேணும் அழுகிப்போனதை நாய்கூட சாப்பிடாதுன்னு சொல்ற ஆண்டவரும் உன்ன Fresh-ஆ தான எதிர்பார்ப்பாரு, வயசான காலத்துல தள்ளாடுகிற காலத்துல ஆண்டவர நேசிச்சு, ஊழியம் செய்யணுமின்னு சொல்ற." இது ஆண்டவருக்கு பிடிக்குமா?

இப்பவே ஆண்டவருக்கு "உன் இதயத்தை கொடு" என்ற அம்மாவின் வார்த்தையைக் கேட்ட மோசஸ், தன் தவறை உணர்ந்தவனாக, "இனி ஜெபிப்பேன், ஆண்டவருக்காய் வாழ்வேன்" என கூறிக் கொண்டு Fresh காய்கறிகளோடு திசையன்விளை சந்தையிலிருந்து வீட்டிற்குக் கிளம்பினான் இயேசுவோடு.

நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை.

பிரசங்கி 12 : 1

15. வெற்றியின் இரகசியம்

எப்படித்தான் படித்தாலும் ஜினோவிற்கு படிப்பு அவ்வளவு சுலபமாக வருவதாகவே இல்லை.

அனைவரும் அவனை பார்த்துச் சொல்வதெல்லாம் ''நீயும் உன் படிப்பும், படிப்புக்கும் உனக்கும் சம்பந்தமே இல்ல ஜினோ'' இப்படியாக அனைவரின் வார்த்தையைக் கேட்ட ஜினோவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அரையாண்டு தேர்விலும் தமிழ், அறிவியல் தவிர அனைத்து பாடத்திலுமே 30 மார்க் தான்.



வழக்கம் போல் அன்றைய தினம் பள்ளிக்கு வேகமாக கிளம்பினான். ''இவ்வளவு பரபரப்பா நீ கிளம்பி போனாலும் நீ பாஸ் ஆக மாட்ட, மெதுவா போ.'' என்ற தங்கையின் வார்த்தையைக் கேட்டதும் சொல்வதறியா பிள்ளைப்போல ஜினோ அமைதியாகவே சென்றான். பள்ளியில் இன்றையதினம் ஒரு ஊழியர் வந்திருக்கிறார். அவர் பரீட்சை எழுதப் போகும் பிள்ளைகளுக்கு சில ஆலோசனைகளைக் கொடுத்து ஜெபிப்பார் என சக மாணவர்கள் சொல்வதைக் கேட்டதும், ஜெபத்தில் ஜினோ கலந்து கொண்டான். கடைசியாக அவரிடம் தனியாகப் போய் சில ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டான். ''சோர்ந்து போகாதே யார் கேலி செய்தாலும் ஆண்டவர் உன்னோடு கூட இருக்கிறார் என்ற நம்பிக்கையோடு பரீட்சைக்காக படி'' என்ற உற்சாக வார்த்தை ஜினோவிற்கு நம்பிக்கையை தந்தது. ஜெபித்தான், ஜெபத்தோடு படித்தான் ஜினோ.

பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது ஜினோவின் தந்தை வேகமாக வந்தார். ''ஜினோ நீ பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் வெற்றி பெற்று விட்டால் உனக்கு ஒரு புது சைக்கிள் பரிசாகத் தருகிறேன்'' என்றார். அம்மா உடனே ''ஜினோ நீ பாஸ் ஆகிவிட்டால், உனக்கு ஒரு புது டிரஸ் வாங்கித் தருகிறேன்'' என்றார்கள். தங்கையும் தன் பங்கிற்கு ''நீ பாஸ் ஆகிவிட்டால் உனக்கு பிடித்த 1 கிலோ மஸ்கோத் அல்வா வாங்கித் தருகிறேன்'' என்றாள்.

அனைவருமே தனக்கு காசு மிஞ்சும் என வேண்டா வெறுப்பாய் வாங்கி கொடுப்பேன் என கூறினார்கள். பள்ளியிலும் ஆசிரியர் ஜினோ பாஸ் ஆகி விட்டால் 1 ஹீரோ பென் வாங்கித் தருவதாக வாக்களித்தார்.

ஜினோ ஆண்டவராகிய இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து ஜெபத்தோடு பரீட்சை எழுதினான்.

அனைவருக்கும் ஒரே ஆச்சரியம் என்னவென்றால், ஜினோ அனைத்து பாடத்திலும் 90 மதிப்பெண்களுக்கு மேல் எடுத்து வெற்றி பெற்றிருந்தான்.

தங்கை ஆச்சரியத்தில் உறைந்தே போனாள். அனைவரும் சொன்ன பொருட்களை வாங்கிக் கொடுத்தார்கள். தந்தை கேட்ட கேள்வி ''உன் வெற்றியின் இரகசியம் என்னடா''

ஜினோ சொன்ன பதில் ''நான் இயேசுவை நம்பி இயேசுவின் மீது என் பாரத்தை வைத்து ஜெபித்ததால்'' என்று புன்னகையோடு கூறினான்.

கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். நீதிமொழிகள் 28 : 25

குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும்;

ஜெயமோ கர்த்தரால் வரும். நீதிமொழிகள் 21 : 31

16. ஆகாயத்தில் சிலம்பம்

அந்த ஊரில் கலக்கல் கன்சாம் என்றாலே சின்ன குழந்தை கூட குபீரென சிரித்துவிடும், அந்த அளவிற்கு காமெடி மன்னன். அவன் நடையே ஒரு தினுசாகத்தான் இருக்கும். அவன் வாயைத் திறந்தாலே போதும், இந்த உலகமே என் சொந்த நிலம் தான் என்ற அளவிற்கு பெருமையாகத்தான் பேசுவான். அவனிடம் வாய் கொடுத்து மாட்டிக் கொண்டவர்கள் பலர், வழி தெரியாமல் அலைந்து கொண்டே இருக்கின்றனர்.

ஒரு முறை அந்தத் தெருவில் "நான் மட்டும் அரசியல்வாதியாக இருந்தால்" என பேச ஆரம்பித்து முடித்ததும், அந்தத் தெருவிலுள்ள ஒரு நாயே செத்துவிட்டது. அந்த அளவிற்கு அவனின் பேச்சில் ஒரு வலிமை காணப்படும்.

வீட்டில் ஒரு வயசான தாத்தாவுடன் வாழ்ந்துவரும் நிலையில் தாத்தா அடிக்கடி சொல்கிற வார்த்தை "டேய் ஆண்டவரை கொஞ்சம் நினைச்சுக் கோப்பா... அந்த இயேசப்பா தான் நமக்கு எல்லாமே" என்று சொல்லி முடிப்பதற்குள் "தாத்தா என் திறமை, என் பேச்சின் மூலமாக நான் எங்க போக போறேன்னு யாருக்குமே தெரியாது" என சொன்னதும், "உனக்காவது தெரியுமா?..." என தாத்தா கேலியாகக் கேட்டதும், சிரிப்பு வந்தாலும் "தாத்தா இது சரியில்ல நான் வர்றேன்" என வேகமாக கிளம்பினான்.

"கையில் 10 லட்சம் பணம் இருக்கு... ஏதாவது பிசினஸ் பண்ணி இந்த ஊரே நம்மை திரும்பிப் பார்க்கிற அளவிற்கு ஏதாவது பண்ணணுமே" என யோசித்துக் கொண்டிருந்த நிலையில் விளம்பர அறிவிப்பு ஒன்று கேட்டது.

‘‘நாங்கள் நடத்தும் சீட்டுக் கம்பெனியில் நீங்கள் போடும் பணம் 20 லட்சத்திற்கு மேலாக இருந்தால் ஒரே வருடத்தில் 5 மடங்காக திருப்பி தரப்படும்.’’ என்ற அறிவிப்பைக் கேட்டதும் வீட்டு பத்திரத்தை 10 லட்சத்திற்கு அடகு வைத்து மொத்தம் 20 லட்சத்தையும் கலக்கல் கன்சாம் கொண்டு போகும் போது ‘‘டேய் யோசிச்சி ஜெபம் பண்ணிட்டு போப்பா... என்ற தாத்தாவின் வார்த்தையைக் கேட்ட கன்சாம், தாத்தா ஜெபத்தை அப்புறம் பண்ணலாம், எனக்கு 5 மடங்கு பணம் கிடச்சதும் முதல்ல இந்த ஊரையே விலைக்கு வாங்கணும், குளத்தை வாங்கணும், ஒரு கப்பல் வாங்கணும்,’’ என அடுக்கிக் கொண்டே போனான்.



‘‘டேய் ஆகாயத்தில் சிலம்பம் ஆடாதடா, ஆண்டவரை நம்பு, மனுஷன் பேச்ச நம்பி ஏமாறாதே’’ என தாத்தா சொன்னதும் ‘‘போ தாத்தா உனக்கு வேற வேலையே கிடையாது’’ என சொல்லிய படியே பணத்தோடு கிளம்பினான்.பணம் கட்டி 6 மாதம் ஆகியது.

திடீரென ஒரு தகவல் ''பணத்தோடு சீட்டுக் கம்பெனிக்காரர்கள் ஓடிவிட்டார்கள்'' என்று கன்சாம் சோகத்தில் மூழ்கியே விட்டான். வீட்டின் பின்னால் உள்ள குடிசை வீட்டில் தாத்தாவோடு தங்க ஆரம்பித்தான்.

''தாத்தா. இயேசுவை மறந்து ஆகாயத்தில் சிலம்பம் அடிச்சது போல பெருமையாக பேசின எனக்கு இது நல்ல பாடம். இனி ஒழுங்காக இருப்பேன்'' என கலக்கல் கன்சாம் கலங்கிப் போய் கூறினான்.

நீங்க எப்படி?...

அலப்புகிற மூடன் விழுவான். நீதிமொழிகள் 10 : 10

பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். I பேதுரு 5 : 5

17. கண்ணீரைச் சிந்தாதே

தினமும் இரவு நேரம் தூங்கும் போதெல்லாம், அம்மாவின் கண்ணீரால் தலையணை எவ்வளவு நனைந்திருக்கிறது எனப் பார்த்து, "கண்ணீர் வடிக்காதேம்மா நான் உனக்கு இருக்கிறேன்" என ஆறுதல் சொல்லியே 3ம் வகுப்பு படிக்கும் ஹேமா தூங்கச் செல்வாள். காரணம் தினமும் குடித்துவிட்டு வந்து அப்பா அம்மாவை அடிப்பதால் என்னசெய்வதென்றே தெரியாதவளாய் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அம்மாவின் முகம் எப்பவுமே சோகமாகவே காணப்படும். "ஹேமாவை நான் எப்படி வளர்க்கப் போகிறேனோ, கணவன் தன் குடியை எப்பதான் மறக்க போகிறாரோ", என எப்பவும் யோசித்துக் கொண்டே சில நேரம் சாப்பிடுவதையே மறந்து விடுவார்கள்.

ஹேமா பள்ளிக்கூடம் செல்லும் வழியில் ஒரு சிற்றாலயம் உள்ளது. அன்றைய தினம் ஒரு சிறப்பு ஜெபம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. என்னதான் நடக்கிறது போய் பார்ப்போமே என உள்ளே நுழைந்தாள்.

அந்த கணம் ஒரு தேவமனிதர் ஆண்டவருடைய வார்த்தைகளை போதித்துக் கொண்டிருந்தார்.

"கண்ணீரை வீணாக சிந்தாதேயுங்கள், அது விலையேறப் பெற்றது. விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தால் நல்ல பலனைக் கொடுக்கும். அதுபோல கண்ணீர் துளிகள் நல்ல இடத்தில் சிந்தப்பட்டால், நம் வாழ்வின் பிரச்சனைகள் மாறும். அந்த நல்ல இடம் இயேசுவின் பாதமே நீங்கள் யாராய் இருந்தாலும், என்ன பிரச்சனையாக இருந்தாலும், ஆண்டவரின் பாதத்தில் கண்ணீரோடு வந்து பாருங்கள். ஆண்டவர் உங்கள் உள்ளத்தின் வேதனைகளை மாற்றி சந்தோஷத்தைத் தருவார்" என்ற போதனையை கண்ணீரோடு கேட்ட ஹேமா அன்றைய தினம் முதல் ஒவ்வொரு நாளும்

சிற்றாலயத்தில் கண்ணீரோடே ஜெபித்து வந்தாள். ஒரு நாள் இரவு நேரத்தில் அப்பா குடிக்காமல் வீட்டிற்கு வந்ததைப் பார்த்ததும் அம்மாவிற்கும், ஹேமாவிற்கும் ஒரே சந்தோஷம்.

''ஹேமா நல்ல சாப்பிட்டியா'' என அப்பா கேட்டதும் ஓடி வந்து அப்பாவின் மேல் ஏறிக்கொண்டாள். ''இனி நான் குடிக்கவேமாட்டேன்'' என அம்மாவிடம் சொன்னதும் ஹேமா ''நன்றி இயேசுவே'' என அவளையும் அறியாதவளாய் சத்தம் போட்டாள்.



''ஆமா ஹேமா இந்த இயேசுதான் இன்றைக்கு என் அருகில் வந்து உன் மகள் நீ குடிப்பதினால் பாவம் போல கண்ணீர் வடிக்கிறாள். உன் மனைவியும் அழுது கொண்டே இருக்கிறாள். குடியை மறந்து விடு ''என சொல்லிக்கொண்டே மறைந்து விட்டார். யார் அந்த இயேசு என அப்பா கேட்டதும், வீட்டிற்கே சுவிசேஷம் சொன்னாள் ஹேமா. அம்மாவின் முகத்திலும் சந்தோஷம். மகிழ்ச்சியான குடும்பமாக ஆலயம் செல்ல ஆரம்பித்தார்கள்.

கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். சங்கீதம் 126 : 5

18. சிரிப்புத் திருவிழா

நகைச்சுவை பற்றி ஒரு பள்ளியில் பல்வேறு கலாட்டா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதில் ஒன்று 1 + 1 கூட்டினால் 3 வரும். எப்படி கூட்டினால் 3 வரும், என ஒரு மாணவன் கேட்க மற்றொருவன் தெரியாது என்றான். அதற்கு இவன் “தப்பா” கூட்டினால் 3 வரும் என கூற பள்ளிக்கூடமே சிரிப்பில் அலறியது. இப்படியே நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்தது.

இறுதி நிகழ்ச்சியாக உண்மையான சந்தோஷம் அல்லது உண்மையான சிரிப்பு எது? என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் பல்வேறு மாணவர்கள் கலந்து கொண்டனர். முதலில் இரண்டு மாணவர்கள் வந்தனர். ஒருவன் எண்ணெய் ஊற்ற, அங்கிருந்த இன்னொரு மாணவன் அந்த வழியில் வந்து வித்தியாசமாக வழுக்கி விழுந்ததும் குபீரென சிரிப்பொலி, தூங்கி கொண்டிருந்த வாட்ச்மேனைத் தட்டி எழுப்பியது.



இரண்டாவது ஒருவன் மொட்டைத் தலையுடன் வந்த மற்ற மாணவனை பார்த்துக் கேலி பண்ணி சிரித்ததும், பயங்கர சிரிப்பு சத்தம் உண்டானது.

மூன்றாவது ஒரு மாணவன் நகைச்சுவை செய்திகள் வாசிக்க வந்தான் அதில் ஒன்று “வானிலுள்ள ஓசோன் மண்டலத்தில் ஓர் அகன்ற ஓட்டை விழுந்துள்ளதால், அந்த ஓட்டையை அடைக்க சென்னையில் இருந்து 4 கொத்தனார்கள் அனுப்பப்படுகிறார்கள்” என்றதும் சிரிப்பு வெடிகள் வெடிக்க ஆரம்பித்தது.

அடுத்ததாக பலகுரல் பேசி சிரிக்க வைத்தான் பண்டாரம். இப்படியே போய் கொண்டிருக்க, ஒரு பிச்சைக்காரன் ஒருவன் சாப்பிட்டு 3 நாள் ஆகிறது. ஏதாவது தர்மம் பண்ணுங்க என்றவுடன் பலர் விலகிச் செல்ல, ஒரு மாணவன் உதவி செய்தான். உதவி செய்த மாணவனை பிச்சைக்காரன் ''நீங்க நல்லா இருக்கணும்'' என்றவுடன் உதவி செய்த மாணவன் ஆனந்த கண்ணீருடன் உள்ளம் பொங்க சிரித்துக் கொண்டே சென்றான். இப்படியாக நிகழ்ச்சி முடிந்தது.

பரிசளிக்க பள்ளியின் நிர்வாகி திரு.ஜேக்கப் பாக்கியராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக சிங்கப்பூரில் இருந்து வந்திருந்தார்கள். ''அனைவரும் நன்றாக செய்தார்கள். சிலர் மற்றவர்களை கேலி பண்ணி, மற்றவர்களை துன்பப்படுத்தி சிரிக்க வைப்பதே உண்மையான நகைச்சுவை, சந்தோஷம் என நினைக்கிறார்கள். அப்படியல்ல, கடைசியாக ஒரு மாணவன் செய்ததைப் போல் மற்றவர்களுக்கு உதவி செய்து, அதன் மூலம் கிடைக்கும் சந்தோஷமே உண்மையான மகிழ்ச்சி. அதனால் அந்த மாணவர்களுக்கே இந்த பரிசை வழங்குகிறேன்,'' என கூற ஒரே உற்சாக கரகோஷம்.

நீங்க எப்படி சந்தோஷப்படுறீங்க...

மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும். நீதிமொழிகள் 15 : 13

19. ஓய்வு பெற்ற ஆசிரியை...

என்ன அழகா சொல்லி கொடுத்தார்கள்... பிள்ளைகளிடமும் அன்பாய் பழகினார்கள், சக ஆசிரியர்களிடமும் அன்பு காட்டினார்கள். கடவுளின் ஊழியத்தையும் அன்பாக நிறைவேற்றினார்கள், என பிள்ளைகள் முதல் ஆசிரியர்கள் வரை அன்றைய தினம் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி.புஷ்பபாய் அவர்களை பாராட்டிய நினைவுகள். அதுமட்டுமல்ல மனதில் சின்ன கஷ்டம், ஒருவிதமான சோர்வுகளோடு இனி என்ன காரியம் செய்ய என சோர்ந்து போய் திருநெல்வேலி ரயில் நிலையத்தில் சென்னை இரயிலை எதிர்பார்த்த வண்ணமாய் பெட்டிப்படுக்கையுடன் உட்கார்ந்திருந்தார்கள்.

பல நினைவுகள் கண்முன்னே கடந்து வந்தன. கிறிஸ்துமஸ் காலத்தில் ஏழை எளிய பிள்ளைகளுக்கு புத்தாடையை இலவசமாக கொடுத்த போது ஒரு ஏழை பையன் முத்துப்பாண்டி "டீச்சர் எனக்கு எப்பவும் இதே மாதிரி உதவி செய்வீங்களா" என கண்ணீர் மல்க கேட்ட கேள்வி.

இரு மாணவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்த பொழுது ஆசிரியை சண்டையை விலக்கியதும் " டீச்சர் இனி உங்க பெயரைச் சொல்லி ஏழுதலைமுறைக்கும் சண்டையே போட மாட்டோம்" என்ற வார்த்தை. பீடி குடித்துகொண்டிருக்கிறான் என சக மாணவன் கணேஷ்-ஐ மாட்டிவிட்டதும் ஆசிரியை இயேசுவின் வார்த்தைகளை சொல்லி கணேஷை நல்ல மாணவனாக மாற்றியதும், "டீச்சர் வருங்காலத்தில் நல்ல ஊழியக்காரனாக வருவேன் எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்" என கணேஷ் கூறிய வார்த்தைகளும் நினைவலையில் வந்து போயின.

ரயில் நிலையத்தில் இருந்து ரயில் புறப்பட்டது. ரயிலில் உட்கார்ந்து கொண்டார்கள். ஒரு சத்தம் எதிரே அமர்ந்தவரிடம் இருந்து வந்தது. "டீச்சர் நல்லா இருக்கீங்களா?" என கேட்க "நீங்க யாரு" என டீச்சர் கேட்டதும்,

''டீச்சர் நீங்க எனக்கு 6ஆம் வகுப்பு பாடம் சொல்லிக் கொடுத்தீர்கள், நான் சேட்டை பண்ணும் போதெல்லாம் ஆண்டவரின் வார்த்தையைச் சொல்லி நல்ல பையனாக இருந்தால் தான் வாழ்வில், முன்னேறுவாய்'' என நீங்க சொல்லிய வார்த்தையைக் கேட்டதால் தான், நான் இன்றைக்கு சென்னையில் மருத்துவராக இருக்கிறேன் என்றார்.



இதைக் கேட்டதும் ஆசிரியைக்கு ஒரே மகிழ்ச்சி. மற்றொரு பெண்ணின் குரல் "டீச்சர் நான் மதுரை கல்லூரியில் விரிவுரையாளராகவும், அந்த பகுதியில் ஊழியமும் செய்து வருகிறேன். இதற்கு காரணம் நீங்கள் எனக்கு படிப்பும், நல்லொழுக்கமும் இறை வார்த்தையோடு சேர்த்து சொல்லித் தந்ததால் தான்'' என கூற, சோர்ந்து போய் இருந்த ஆசிரியை முகத்தில் வெற்றியின் சந்தோஷம் உதிக்க ஆரம்பித்தது. இனி என்ன செய்வது எப்படி? பொழுதை கழிப்பது.? என யோசித்துக் கொண்டிருந்த ஆசிரியையின் உள்ளத்தில் படிப்போடு இயேசுவின் நல்ல வார்த்தையைச் சொல்லி கொடுத்ததால் அநேக நல்ல உள்ளங்கள் எழும்பி இருக்கிறார்கள். இனி இயேசுவுக்காய் ஊழியத்தை செய்து அநேக ஆத்துமாக்களை எழுப்ப வேண்டும், என மனதிற்குள் தீர்மானம் செய்தபடியே பயணத்தை மேற்கொண்டார்கள். பின்பு ஆண்டவருக்காய் சந்தோஷத்தோடும் நல் மனதோடும் ஊழியத்தைச் செய்தார்கள்.

முதிர் வயதிலும் கனி தந்து புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்.

சங்கீதம் 92 : 15

20. தடுமாற்றம்

மாலை 4 மணி பயந்து பயந்து வீட்டிற்குள் நுழைந்தான். 9ஆம் வகுப்பு படிக்கும் ஸ்டாலின். அவன் பயந்தது போலவே அப்பாவின் கைகளில் மலை பிரம்பு காத்துக் கொண்டிருந்தது.

“டேய் பரீட்சையில என்கிட்ட மார்க் பத்தி ஏண்டா ஒண்ணும் சொல்லல” என கொர்ச்சிக்கிற குரலோடு அப்பா கேட்டதும், Daddy நான் சொல்லணுமின்னுதான் நினைச்சேன், ஆனா மறந்திட்டு, என வழக்கம் போல மழுப்பலான பதிலையே கூறினான். கோபத்தில் அப்பா பிரம்போடு ஸ்டாலினை விரட்ட ஜெட் வேகத்தில் பறந்து விட்டான். “எப்படி இருந்தாலும் வீட்டுக்கு தானே வருவாய் அப்ப உன்னை கவனித்து கொள்கிறேன்” என சொல்லிக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார்.



“எப்ப பார்த்தாலும் அப்பா அடித்துக் கொண்டே இருக்கிறார். வீட்டில் இருந்தா தானே பிரச்சனை வீட்டை விட்டு ஓடி விட்டால்...” என தன்னையும் அறியாமல் வேகமாக யோசிக்க ஆரம்பித்தான் ஸ்டாலின். மாலை 6.30 மணி அப்பா வெளியில் சென்ற நேரம், அம்மா தோட்டத்தில் நின்று கொண்டிருந்த நேரம், வேகமாக வீட்டிற்குள் நுழைந்தான் ஸ்டாலின்.

பீரோவை எட்டிப் பார்த்தான் சாவி இருந்தது. திறந்தான். 500 ரூபாய் மட்டும் எடுத்துக் கொண்டான். பேருந்துநிலையம் வந்தான். சென்னை பேருந்தில் வேகமாக ஏறிக்கொண்டான். "இந்த பஸ் எங்கே போகுதோ அந்த இடத்திற்கு ஒரு டிக்கெட் கொடுங்க" என கேட்டுக்கொண்டான். இரவு 10.00 மணி உணவு அருந்துவதற்கு பேருந்து ஓர் இடத்தில் நிறுத்தப்பட்டது.

ஹோட்டலுக்குள் ஸ்டாலினும் நுழைந்தான் "ஒரு தோசை உளுந்த வடையுடன் கொண்டு வாங்க" என வீட்டின் அதிகார தொனியோடே அழைத்தான். "தோசை சரியா வேகலியே..." ஸ்டாலின் கேட்டதும் "இப்படித்தான் இருக்கும்" என அலுத்துப் போன பதில், இலையை மூடிவிட்டு வெளியே கிளம்பினதும், மனதின் ஓரத்தில் ஒரு சின்ன நினைவு,

"சாப்பாடு வேண்டாம்" என சொன்னாலும் அம்மா ஊட்டி விடுவார்களே. கண்ணீர் கசிந்தது ஸ்டாலினுக்கு. பஸ்ஸில் ஏறும் போது பர்ஸ் கீழே விழுந்ததைகூட ஸ்டாலின் கவனிக்கவில்லை. மணி 11.30 டிக்கெட் பரிசோதிக்கப்பட்டது ஸ்டாலின் கெஞ்சியும் யாரும் கவனிக்கவும், கண்டுகொள்ளவும் இல்லை. பஸ்ஸில் இருந்து இறக்கிவிடப்பட்டான். மணி இரவு 12.15 என்ன செய்வதென்றே தெரியவில்லை, யாரிடம் கெஞ்சியும் உதவி கிடைக்கவில்லை.

பல நினைவுகளோடு அழ ஆரம்பித்தான். "அடித்தாலும் அடுத்த நிமிடமே பாசமாய் பேசும் அப்பா, சண்டை போட்டாலும் நேசிக்கும் தங்கை, நான் சாப்பிடாவிட்டால் துளியும் சாப்பிடாத அம்மா, தூங்கி விட்டேனா என பார்த்து அதன்பின் தூங்கும் பாட்டி" என அனைவரையும் நினைத்து அழுதுவிட்டான். மணி 1.00...தனி மரமாய் கேட்பாரற்று நின்று கொண்டிருந்தான்.

மனங்கசந்து அழுது ஜெபிக்க ஆரம்பித்தான். "ஆண்டவரே என் சுயபெலத்தை நம்பி நான் தடுமாற்றம் அடைந்தேன் எனக்கு உதவி செய்யுங்கள்" ஜெபித்து முடிப்பதற்குள் போலீஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. நடந்ததை சொன்னான். ஜீப் ஸ்டாலின் வீடு நோக்கி சென்றது, வீட்டின் வாசலில் சோகமயமாக அப்பா உட்பட அனைவரும் காத்து நின்று கொண்டிருந்தனர் ஸ்டாலினைப் பார்த்ததும் அணைத்துக் கொண்டனர். "இனி வாழ்வில் தடுமாற்றம் அடையமாட்டேன்ப்பா நீங்க சொல்றதை கேட்டு நடப்பேன். ஜெபித்து நல்ல மதிப்பெண் எடுப்பேன்" என அழுதுகொண்டே தீர்மானம் பண்ணினான் ஸ்டாலின்.

5

ஸ்டாலின் தீர்மானம் பண்ணும் போது

அதிகாலை 4.00 மணி...

என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள்!

உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. நீதிமொழிகள் 1 : 8

---

21. FACEBOOK

மிதமிஞ்சிய கற்பனை...

ஓர் செழிப்பான காட்டில் அனைத்து விலங்குகளும் சிங்கத்தின் தலைமையில் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தன. திடீரென நரிக்கூட்டங்கள் ஒரு தகவலோடு சிங்கத்தை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தன. ''மனிதர்கள் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கு செல்போன், கம்ப்யூட்டர் ஆகியவற்றை பயன்படுத்திக் கொள்கிறார்கள், எங்களுக்கும் அதே போல் ஏதாவது வேண்டும். காலா காலமாக "நரி என்றால் ஊளைதான் விடும்'' என்ற பழைய பஞ்சாங்கத்தை மாற்றவேண்டும் என கூறி முடிப்பதற்குள், குரங்கு கூட்டம் ''ராஜாவே நண்பர்கள் தகவல்களை பரிமாறிக் கொள்ள Facebook என்ற இணையதளத்தையும் பயன்படுத்துகிறார்கள். நாமும் அதில் இணைந்துவிட்டால் பல சாதனைகளை மனிதர்களுக்கு நிகராக சாதிக்கலாம்'' என்று சொன்னவுடன் "ஆமா இது நல்ல யோசனையாக இருக்கிறது. ஆனால் ஒரு சின்ன காரியம் இந்த நாகரீக வளர்ச்சி நம்மை பாதிக்காத அளவிற்கு நம்மை நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என கூறிக் கொண்டே அனைவருக்கும் Computer வாங்கித் தருவதாக அறிவிப்பு சொன்னது காட்டுத்தலைவன் சிங்கம்.

காட்டிலுள்ள அனைத்து விலங்குகளும் Computer கற்றுக்கொண்டன, காடே மாறிவிட்டது. தகவல்கள் வேகமாக பரவ ஆரம்பித்தது. Facebook மூலம் ஓநாய்கள் கூட, கிளி, குருவி முதலான பறவைகளை நண்பர்களாக்கி அடித்துக் கொன்று சாப்பிட்டன. நரிகள் சில விலங்குகளை நண்பர்கள் போல Facebook -ல் ஏமாற்றி அடித்துச் சாப்பிட்டன. இப்படியே பல கொலைகளும் ஏமாற்று சம்பவங்களும் காட்டில் நடந்து கொண்டே இருந்தது.

சில அப்பாவி விலங்குகள் ராஜாவிடம் முறையிட்டன. "ராஜாவே இந்த Facebook மூலம் பல கொடுமைகள் நடக்கிறது.

ஆகவே இதை தடைசெய்யுங்கள்" என்றதும், வேதனையுடன் சிங்கம் "இந்த Computer வருவதற்கு முன்பு நாம் அமைதியாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம்.



ஆனால் இந்த Facebook வந்த பிறகோ, நம் காடே சீரழிந்துவிட்டது. கடவுளின் அன்பையும் விட்டுவிட்டோம். எனவே இதை தடை செய்வதோடு நாம் குழுவாக நாட்டுக்குள்ளேயும் சென்று Computer, Facebook ஆகியவற்றின் தவறுகளை சுட்டிக்காட்டி இயேசுவின் அன்பை சொல்லி மக்களை நல்வழிப் படுத்துவோம்" என காட்டுராஜா தலைமையில் விலங்குகள் சபதம் எடுத்துக் கொண்டன.

தம்பி, தங்கச்சி இந்த மிதமிஞ்சிய கற்பனை உனக்கு பிடிச்சிருக்கும் என்று நினைக்கிறேன். உன் வாழ்வை எதற்கும் அடிமையாக்கி விடாதே. எல்லாம் மாயை எதிலும் சிக்கிக் கொள்ளாதே.

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். பிரசங்கி 12 : 14

எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.

I கொரிந்தியர் 6 : 12

22. போர்வை

பள்ளி மணியோசையில் பள்ளி மாணவர்கள் அலறி அடித்து ஓடினார்கள். மணி ஓசையைக் கேட்டு அல்ல. PET சாரின் அடிக்கு பயந்து வகுப்பு ஆரம்பித்தது. ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டது, ''இன்று மாலை பாலியர் சங்க அண்ணன் ஒருவர் நம் பள்ளிக்கு வருவார் ஆகவே பள்ளி மாணவர்கள் மாலை 4.20 மணியிலிருந்து 5.00 மணி வரை உட்கார்ந்து செல்ல வேண்டும்'' என்பதே. சீனு ராஜிடம் ஏலே என்னடா, Churchக்கும் போறோம் இங்கேயுமாடா?... என்ன பண்றது?... ''டேய் நாம அறிவிப்பின்படி நடக்கலன்னா நாளைக்கு அசெம்பிளில வச்சி நொறுக்கிடுவாங்க, சும்மா இருந்து தான் பார்ப்போம் ''சரி நீ சொல்றதால கேட்கிறேன்'' என சீனுவும் கிளம்பினான்.

மணி 4.20 ஆனது அண்ணன் வந்தாங்க ''போர்வை'' என்ற கதையொன்றை கூறி கிறிஸ்தவனாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், நீங்கள் இந்த ''போர்வை'' கதை போல வாழ வேண்டும் என கூறிச் சென்றார்கள். ராஜ், சீனுவுக்கு ஒரே போர்.

''என்னடா இது ! போர்வை மாதிரி இருக்கணுமாம்,
போர்வையின் தன்மை போல வாழணுமாம்.
இதெல்லாம் தேவையா நமக்கு?''
என அலுத்துக் கொண்டார்கள்.



அன்று இரவு ராஜ், சீனு வீட்டிற்கு படிப்பதற்காகச் சென்றிருந்தான். இரவு நேரம் இருவரும் மொட்டை மாடியில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். அது டிசம்பர் மாத குளிர்காலம். இரவில் குளிர் அதிகமானது சீனு கத்தினான் அப்பா ''என்னுடைய போர்வையை எடுத்துட்டு வாங்கப்பா'' என சத்தம் போட்டான். ''உன்னுடைய போர்வையை அம்மா துவைத்து உலர போட்டிருக்கிறாள்'' என்ற அப்பாவின் குரல் எதிர் முனையில் கேட்டது. ''அப்பா எனக்கு குளிர் ஆட்டுகிறது ஏதாவது கொண்டு வாங்களேன்'' என உரத்த குரலில்

வேகமாக கத்தினான் சீனு. அப்பா வேகமாக அவருடைய கம்பளி போர்வையை எடுத்துக் கொண்டு வந்தார். "பார்த்தியா சீனு இந்த போர்வையின் தன்மையை, உதவியாக இருந்தது மட்டுமல்ல, உற்சாகத்தையும் கொடுத்திருக்கிறது" என்று கூறி, அப்பா சென்றவுடன் சீனு கண்களில் பாலியர் சங்க அண்ணன் தெரிந்தார், அவர் கூறிய "போர்வை" கதை காதுகளில் தொனித்தது. "நாம் ஏழைகளுக்கு உதவும் போர்வையாகவும், கஷ்டப்படுவோருக்கு ஆறுதலான போர்வையாகவும் இருக்க வேண்டும், இயேசுவும் கூட உன்னையும், என்னையும் காக்கிற, தேற்றுகிற போர்வையாக விளங்கினார், விளங்குகிறார், நீ மற்றவர்களுக்கு இயேசுவின் தன்மையுடன் கூடிய போர்வையாக விளங்குகிறாயா?" என்று அண்ணன் கூறிய வார்த்தையை எண்ணி ராஜுவும், சீனுவும் போர்வையின் தன்மையாய் விளங்க வேண்டும், என தீர்மானம் எடுத்துக் கொண்டார்கள்.

தம்பி, தங்கச்சி நீ மற்றவர்களுக்கு உதவி செய்யும் போர்வையாக விளங்குகிறாயா?

கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்,
உம்முடைய கரத்திலே வல்லமையும், பராக்கிரமமும் இருக்கிறது.
II நாளாகமம் 20 : 6

(இயேசு) நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற
எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும்
அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். ஏசாயா 25 : 4

23. அவசரப் படாதே

ஒரு காட்டில் தன் சிஷ்யர்களுக்கு வில்வித்தைகளை கற்றுக் கொடுத்து கொண்டிருந்தார் ஒரு வில்வித்தை வீரர். இரண்டு பேர் நன்றாக தேர்ச்சி பெற்றவர்களானார்கள். நம்முடைய இலக்கு எப்போதுமே தப்பவே கூடாது அம்புகளை வீணாக்கவும் கூடாது என சொல்லிக் கொடுத்து வந்தார். இருவரும் நன்றாகவே தேறினார்கள்.

ஒரு நாள் "நீங்கள் வேட்டையாடி வாருங்கள், உங்களுக்கு நான் தலா இரண்டு அம்புகள் தருவேன், வெற்றி வாகை சூடிவாருங்கள்" என அனுப்பினார். சிஷ்யர்களுக்கே தெரியாமல் அவர்களுக்குப் பின்னால் மறைந்து, அவர்கள் என்ன செய்கிறார்கள் என பார்ப்பதற்காகச் சென்றார்.

இருவரும் "நாம் எப்படியாவது குருவிடம் நல்ல பெயர் வாங்கியாக வேண்டும்" என பேசிக்கொண்டே சென்றனர்.

காட்டுக்குள் சென்றனர். விலங்குகளின் கொர்ச்சிக்கிற குரல்... பறவைகளின் சத்தம்... என பல கேட்டாலும் அவர்களுக்கு பயமாகவே தோன்ற வில்லை. காரணம் அவர்கள் நன்றாகவே பழக்கப்பட்டவர்கள்.



இருவரில் ஒருவன் ஒரு புறாவை பார்த்துவிட்டான் "டேய் இதை அம்பு எய்தி கொன்று விடுவோம்" என கூற, இன்னொருவன் "இல்லை இதை விட பெரிய உயிரினத்தை கொல்வதற்கு இந்த அம்பை பயன்படுத்துவோம்" என்று சொல்லியும் இவன் கேட்பதாகவே இல்லை. அம்பெய்தி பார்த்தான் புறாவும் பறந்துவிட்டது, அம்பும் தொலைந்து விட்டது

அடுத்த அம்பையும் கோபத்தில் "உன்னை வீழ்த்தாமல் விட மாட்டேன்" என கூறி அம்பெய்தான், கண்ணுக்கு எட்டின தூரம் வரை அம்பை காணவில்லை. ஆனால் இன்னொருவன் ஞானமாய் இதை விட பெரிய உயிரினத்தை கொல்வதற்கு தான் இந்த இரண்டு அம்புகளை பயன்படுத்துவேன் என உறுதியாக இருந்தான். சற்று நேரத்தில் தொலைவில் ஓர் மான் நின்று கொண்டிருந்தது. அதை எப்படியாவது வீழ்த்திவிடலாம் என நினைத்து தன் அம்புகளில் ஒன்றை எடுத்து சரியாய் குறி பார்த்து ஞானமாய் அம்பெய்தினான். மான் அகப்பட்டுக் கொண்டது. ஒரு அம்பும் மிச்சம் ஆனது. குரு அவர்களுக்குப் பின்னால் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார்.



குரு இரண்டாவது உள்ளவனிடம் " நீ நிதானமாய் செயல்பட்டாய், ஆசியும் பெற்றாய், உனக்கே இந்தப் பரிசு" என்றார். முதலாவது உள்ளவனிடம் "நீ புறாவிற்கு ஆசைப்பட்டு அம்பை தொலைத்துவிட்டாய், மானையும் விட்டுவிட்டாய், இனியாவது அவசரப்படாதே" என கூறி குரு சென்றுவிட்டார்...

அன்பான தம்பி, தங்கச்சி சில நேரங்களில் நாம் அவசரப்பட்டு ஆண்டவரின் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் இழந்துவிடுகிறோம். அவசரப்படாமல் ஆண்டவர் சமூகத்தில் காத்திருப்போம் ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெறுவோம்.

ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்.

பிரசங்கி 10 : 10

24. புதைக்கப்பட்ட வரலாறு

குக்கிராம மக்களே ஏனோ தானோ என்று வாழ்பவர்கள் தான். இதில் டேவிட், ஜோனத்தான் என்ற இணை பிரியா நண்பர்களும் உண்டு. இவர்களுக்கும் ஆலயம் செல்வது என்பது துளிகூட பிடிக்காது. யாராவது பிரசங்கம் செய்ய வந்தால் கூட கேலியும், கிண்டலும் செய்து அவர்களை அனுப்பி விடுவார்கள். ஞாயிற்றுக்கிழமை ஆராதனை என்றால் ஆலயத்தில் உபதேசியார் மற்றும் நான்கு பேர் மாத்திரம் உட்கார்ந்திருப்பார்கள். மீதி அனைவரும் வீட்டில் டிவி முன் உட்கார்ந்திருப்பார்கள்.

ஊரில் எப்போதும் கெட்ட வார்த்தைகள், சண்டை சத்தம் அதிகமாகவே கேட்கும். ஒரு சில மக்கள் ''எங்கள் ஊரை பரிசுத்தமாக மாற்றும் கர்த்தாவே'' என்று ஜெபித்துக் கொண்டே இருப்பார்கள். டேவிட் ஜோனத்தான் இருவரும் கல்லூரி படிப்பை முடித்துவிட்டு ஊரை பலநாள் சுற்றிக் கொண்டு இருப்பவர்கள். இருவருக்கும் ஒரு விஷேச ஆசை உண்டானது. நாமும் சிலரை போல ஏதாவது புதையல்களை கண்டுபிடித்து பெரிய பிஸ்தாவாக மாற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

வீட்டில் சொல்லாமல் குக்கிராம காட்டுப்பகுதிக்கு வேகமாக சென்றார்கள். ஜோனத்தானுக்கு சின்ன எலிகூட டைனோசர் போலதான் தெரிந்தது. செத்துப்போன பாம்பை பார்த்தவன் 2 மணி நேரம் கழித்து தான் மயக்கம் தெளிந்தவனாய் எழும்பினான். ஆனால் டேவிட் ஜோனத்தானை காட்டிலும் திறமையானவன், பயப்படாதவன். இருவரும் புதையலை தேடி வேகமாய் முன்னேறினார்கள். சாப்பாட்டிற்குத் தேவையான ரொட்டி மற்றும் காய்கறிகளையும் எடுத்துக்கொண்டு சென்றனர். அதை வேண்டிய நேரம் சாப்பிட்டுக் கொண்டார்கள்.

அக்காட்டுப் பகுதியில் இடிந்து போன ஒரு குடிசை வீட்டைக் கண்டனர். உள்ளே நுழைந்ததும் ஒரு பல்லி, பாம்பை போல சீறிவந்ததை பார்த்ததும் ஜோனத்தான் ½ கிலோ மீட்டர் தூரம் ஓடியே விட்டான். பின் சின்ன பல்லி தான் என தெரிந்ததும், மறுபடியும் டேவிட்டோடு சேர்ந்துக் கொண்டான். குடிசை வீட்டை தீவிரமாய் சோதனை செய்தனர், புதையலைத் தேடி. டேவிட் காலில் லேசான இரும்பு சத்தத்துடன் ஒரு பெட்டி அகப்பட்டது.



டேவிட்டிற்கு ஒரே சந்தோஷம். இது புதையல் தான் என நம்பி தோண்ட ஆரம்பித்தான். ஜோனத்தானும் வேகமாய் உதவி செய்தான். ஒரு பெட்டி கிடைத்தது. பெரிய எதிர்பார்ப்போடு அதை உடைத்தனர். நிறைய மங்கிபோன போட்டோ, நிறைய எழுத்துக்கள் அடங்கிய புத்தகம், வேதாகமம் என காணப்பட்டது. "இதை படித்து பாருங்க" என ஒரு மங்கிய புத்தகம் காணப்பட்டது.

வெளிநாட்டில் இருந்து வந்து, இந்த குடிசை வீட்டில் தங்கி ஊழியத்தை மேற்கொண்ட மிஷனெரி தன்னுடைய உடைமைகளை விற்று திருச்சபையை உருவாக்கிய வரலாறு அதில் காணப்பட்டது. இதை படித்ததும் டேவிட் ஜோனத்தான் கண்களில் கண்ணீர் பொங்க ஆரம்பித்தது.

“மிஷனெரி ஐயா எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த கிராமத்தை உருவாக்கி, ஆண்டவரின் வார்த்தைகளை சொல்லி நம்மை நல்வழிப்படுத்தி இருக்காங்க, நம் மக்கள் அத மறந்து பாவ வழியில் வாழ்ந்துகிட்டு இருக்காங்க, இதை எப்படியாவது சரி செய்யணும், மிஷனெரிகளின் தியாகத்தை மக்களுக்கு சொல்லணும்” என தீர்மானம் பண்ணிக் கொண்டே அந்த “புதைக்கப்பட்ட வரலாற்றை” எடுத்துக் கொண்டு குக்கிராமம் சென்றனர். இருவரும் சுவிசேஷம் சொல்ல ஆரம்பித்தனர்.

மிஷனெரிகள் தங்களுடைய உடைமைகளை விற்று சபைகளை கட்டியதை சொல்ல ஆரம்பித்தனர். ஏனோ தானோ என்று வாழ்ந்த குக்கிராமம் “பரிசுத்த ஊராய்” மாறியது. உங்களுடைய சபை எப்படி உருவானது. புதைக்கப்பட்ட வரலாற்றைப் புரட்டிப் பாருங்க...

வழிகளிலே நின்று, பூர்வபாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; எரேமியா 6 : 16

25. கள்ளிப்பால்

தங்கையா என்ற பெயரை கேட்டதுமே, சிறுபிள்ளைகளுக்கு கூட தெரியும் பால்வியாபாரி என்று. வீட்டில் ஜாலியாக பேசக்கூடியவர், வெளியில் யார் உதவி கேட்டாலும் கோபத்தில் "உர்" என்று காணப்படக்கூடியவர். பால் வியாபாரம் மூலம் நல்ல வருமானம் வந்தாலும் மகள் அடிக்கடி சொல்வதை காதில் போட்டுக் கொள்ளவே மாட்டார்.

"அப்பா கடவுளுக்கு கொடுக்க வேண்டியதையும், மனிதனுக்கு கொடுக்க வேண்டியதையும் சரியாய் கொடுக்கணும்பா" என்றதுமே, "நீ சின்னப் பிள்ளை உனக்கு ஒன்றும் புரியாது உன் வேலையை மட்டும் பாரும்மா" என தங்கையா சொல்லிக் கொண்டு வேகமாக கிளம்பிச் சென்று விடுவார். தங்கையாவிற்கு எப்போதுமே, ஓர் எண்ணம் உண்டு "நான் தான் கஷ்டப்பட்டு உழைக்கிறேன் இதை ஏன் கடவுளுக்கும், கஷ்டப்படுகிறவர்களுக்கும் கொடுக்கணும்" என்ற கொடூர நினைப்பு அப்பப்போ வந்து போகும். மகள் பேன்ஸி ஜெபத்தில் எப்பொழுதும் தந்தைக்காக ஜெபித்து கொள்வாள். தங்கையா ஒரு நாள் தெற்கு தெருவில் பால் வியாபாரம் செய்வதற்காக சென்று கொண்டிருந்தார். அவரது மோட்டார்



சைக்கிளில் ஓர் ஒலி கேட்டுக்கொண்டே இருக்கும். “தங்கையா பால், சுத்தமான பால் வாங்க” இதைக் கேட்டதும் மக்கள் ஓடி வருவார்கள்.

தெருவைக் கடந்து கடைசி வீட்டில் குழந்தையின் அழுகுரல் கேட்டுக்கொண்டே இருந்தது. அந்த வீட்டில் இருந்து தாய் அழுதுகொண்டே ஓடி வந்தாள். “ஐயா எங்களை செய்யாத குற்றத்திற்காக ஊரை விட்டு ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஊரில் எந்த கடைக்கு போனாலும் பால்கூட தரமாட்டேன் என்கிறார்கள் நான் சாப்பிட்டு 3 நாள் ஆகிறது. குழந்தை பசியால் அழுதுகொண்டே இருக்குதுய்யா.



நீங்க எனக்காக இல்ல, அழுகிற என் குழந்தைக்காக கொஞ்சம் பால் தாங்கய்யா” என அந்த தாய் ஏங்கி ஏங்கி அழுதாள். “சீ... காசு தா... பால் தாரேன்.. இந்த அழுகிற வேலையை என் கிட்ட வச்சிக்காதே...” என சொல்லிக் கொண்டே தன் மோட்டார் சைக்கிளில் பறந்துவிட்டார்.

பால்கார தங்கையா வீட்டில் வந்ததும் தன் மகளிடம் பெருமையாக பேச ஆரம்பித்தார். “பேன்ஸி இன்றைக்கு ஒரு வீட்டில் Freeயா பால் கேட்டா ஒரு பெண்மணி, நான் கொடுக்கவே இல்ல குழந்தைக்காவது பால் தாங்க சாப்பிட்டு மூணு நாள் ஆகிறது என்றாள் நான் கண்டுக்கொள்ளவே இல்லை” என விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே கூறினார்.

பேன்ஸிக்கு கோபம் வந்தது “என்னப்பா நீங்க இந்த வியாபாரம் செய்றதுக்கு முன்னாடி வியாதிப் படுக்கையில் கிடந்தப்ப, ராஜமணி மாமா ஜெபம் பண்ணினதும் நல்ல சுகம் கிடைத்தது. அதுமட்டுமல்ல 10 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஏதாவது தொழில் செஞ்சி பிழைச்சிக்கோ என உதவி செஞ்சதால தான் கர்த்தர் உங்களை ஆசீர்வதிச்சாங்க. ஆனா நீங்க அந்த செயலை துளி கூட நினைக்காமல் மறந்திட்டீங்க” என்றதும் “சரிம்மா நாளைக்கு அந்த பிள்ளைக்கு Freeஆ பால் கொடுக்கிறேன்” என சொல்லிக் கொண்டே வீட்டிற்குள் சென்று விட்டார்.

அடுத்த நாள் காலையில் வழக்கம் போல் தன் பால் வியாபாரத்தை தொடர ஆரம்பித்தார். அந்த பிள்ளையின் வீட்டிற்கு வேகமாக சென்றார். வீட்டின் முன் ஒரே கூட்டம் அது மட்டுமல்ல அழுகை சத்தம். “என்ன கூட்டம்” என விசாரித்தார். “ஊரைவிட்டு தள்ளி வச்சிட்டாங்களாம். குடிக்க பால்கூட இல்லாம தாயும், குழந்தையும் இறந்துபோயிட்டாங்க.” என்றதும், தங்கையாவின் கண்களில் கண்ணீர் வடிய ஆரம்பித்தது. வெளியில் ஓர் சத்தம் கேட்டது. “கள்ளிப்பால் ஊற்றி பிள்ளையை கொல்வதை விடக் கொடுமை, பால் இல்லாமல் சாகிறது தான்.”

இதைக் கேட்டதும் தங்கையா தனியாய் போய் மரத்தில் முட்டி முட்டி அழுது, “இனி யாருக்கும் உதவி செய்யாமல் இருக்கமாட்டேன் 4ல் 2 பகுதியை ஏழைகளுக்கு கொடுப்பேன் ஆண்டவரே, என்னை மன்னியும்” என மனங்கசந்து அழுது தீர்மானம் பண்ணிக்கொண்டே வீட்டிற்கு சென்றார். கள்ளிப்பால் வியாபாரியாக அல்ல பால் வியாபாரியாக...

ஏழையின் கூக்குரலுக்குத் தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும் போது கேட்கப்படமாட்டான்.

நீதிமொழிகள் 21 : 13

ஆசிரியரைப் பற்றி . . .



கடந்த 9 வருடங்களாக திருநெல்வேலி திருமண்டல பாலியர் சங்க ஊழியத்தில் முழுநேர ஊழியராக ஆண்டவருடைய ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை கதைகள் மூலமாகவும், பொம்மை காட்சிகள், மேஜிக் ஷோ மூலமாகவும் சிறுபிள்ளைகள், இளைஞர்கள், பெரியவர்களுக்கு சுவிசேஷமாக சொல்லும் கிருபை பெற்றவர். இவருடைய முதல் வெளியீடான ''சுட்டீஸ் சுவீட்ஸ் கதைகள்'' கர்த்தருடைய பெரிதான கிருபையினால் அநேக சுட்டீஸ் பெற்றோரை நேசிக்கும் பிள்ளைகளாகவும், நல்ல வழியை பின்பற்றும் பிள்ளைகளாகவும் மாற்றி உள்ளது. பெரியவர்களுக்கும் மிகவும் பிரயோஜனமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் அநேக புஸ்தகங்கள் வெளிவர தொடர்ந்து ஜெபியுங்கள். கர்த்தரின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.



Bright - 94422 72888